புதுமலர்: 13 இதழ்: 05 புரட்டாதி - ஐப்பசி

# அனல்

01.09.2016

**அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்**

ஆவியிலே அனலாயிருங்கள்: கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.

- ரோமர் 12:11 -



## பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

# பொருளடக்கம்


01. அனலின் சத்தம்

02. கதையும் கற்றதும் - பார்க்கும் பார்வையில்

03. வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல் - பாகம் 08

04. ஜீவ அப்பம் நானே

05. பெண்கள் பக்கம் - உன் செய்கைக்கு தக்கபலனைக் கர்த்தர் உனக்கு கட்டளையிடுவார்

06. நற்செய்திப்பகுதி - பாடுகளின் நடுவே உன் நம்பிக்கை

07. தேவ பணியாளர் பட்டறை - 02

08. சிறுவர் வட்டம் - தேவதூதர்களின் பராமரிப்பு

09. அருட்பணியாளர் சரிதை - ஷீ மேயு. ஹென்றி நாட்

10. அனலின் ஆன்மீக விருந்து

11. வினா விடை - 77

12. குறுக்கெழுத்துப்போட்டி - 75




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய முகவரி:




**சீயோன் ஜெபக்குழு,**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.


## மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:




ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

# அனலின் சத்தம்!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாசக நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

என் வாழ்வில் ஒரு இருண்டு சூழ் நிலைக்குள் சென்று கொண்டிருக்கிறேனே, என் வாழ்வில் எப்போது வெளிச்சம் உதிக்கப் போகின்றது என்ற ஏக்கத்துடன் உங்கள் வாழ்வைக் கடத்திச் செல்கின்றீர்களா?

உங்கள் வாழ்வின் பாதையில் உங்களை வெளிச்சமாக்க, வெளிச்சத்தின் பாதையில் நடத்தவே ஆண்டவர் இயேசு கிறிஸ்து இருக்கின் றார். தேவனுடைய வார்த்தை சொல்கிறது: **ஆண்டவர் நீதியின் சூரியன்** என்று. **மத்தேயு 5:15 கூறுகின்றது: இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் திசையி லிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது** என்று.

ஆம் பிரியமான வாசக உள்ளங்களே, உன் வாழ்வில் ஒளியேற்ற ஆண்டவர் ஆவலாகவே இருக்கிறார். உன் உள்ளத்தால் அவரை ஏற்றுக் கொள். உன் வாழ்வு பிரகாசமாகும். மெய்யான ஆத்தும விடுதலையை நீ பெற்றுக் கொள்வாய். உன் வாழ்வில் உள்ளத்து சமாதானம் பெற்றுக் கொள்வாய்.

தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

– ஆசிரியர் –




வை.விமலதாஸ்

ஒரு முறை ஒரு தகப்பனும் அவரது சிறிய மகனும் வீட்டிலிருந்து வெளியே சென்று சுற்றிவிட்டு வரலாம் என்று முடிவெடுத்தார்கள். அந்த ஊரில் அந்த வாரத்தில் பெருமழை பெய்தமையினால் பாடசாலைகள் எல்லாம் நிறுத்தப்பட்டு ஒரு வாரம் பாடசாலை விடுமுறை விட்டிருந்தார்கள். எனவே இவன் இரண்டு மூன்று நாட்களாக எங்கும் செல்லாது வீட்டிலேயே இருந்தமையால் அவனுக்கு அலுப்புத்தட்ட ஆரம்பித்திருந்தது. எனவே அவன் எங்காவது வெளியே சென்றுவிட்டு வரவேண்டும் என்று தன் தகப்பனைப் பார்த்து, "அப்பா என்னை எங்காவது வெளியே கூட்டிச் செல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டே இருந்தான். இதனால் அந்த தகப்பன், "மகனே சற்று பொறுத்திரு. மழை சற்று ஓய்ந்த பிற்பாடு உன்னை நான் வெளியே கூட்டிச் செல்கிறேன்" என்று கூறியிருந்தார். அதன் பின் இரண்டு நாட்கள் கழித்து மழை ஓய்ந்த போது அந்த மகன் தகப்பனிடம் ஓடிச் சென்று, "அப்பா இன்று நீங்கள் என்னை எப்படியாவது வெளியே கூட்டிச் செல்ல வேண்டும்" என்று கேட்டான்.

சரியென்று அந்த தகப்பனும் தன் மகனை அழைத்துக் கொண்டு அவர்களது வீட்டிற்கு அருகாமையில் இருக்கும் பூங்காவிற்கு சென்று நேரத்தைச் செலவிட்டு வரலாம் என்று சென்றார். அவர்கள் அவ்வாறு வீதியோரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது வீதியெல்லாம் தண்ணீர் காணப்பட்டது. ஆங்காங்கே காணப்பட்ட பள்ளங்களில் தண்ணீர் நிறைந்து காணப்பட்டது. இவர்களும் சாலையோரமாக நடந்து சென்று

கொண்டிருந்தார்கள். அப்போது அந்த வீதியில் மிக வேகமாக கார் ஒன்று வந்தது. அந்தக் கார் இவர்கள் சென்று கொண்டிருந்த இடத்தை கடந்து செல்லும் போது வீதியில் காணப்பட்ட தண்ணீர் இந்த தகப்பனின் மேலும் மகனின் மேலும் தெறித்தது. இவர்கள் முழுவதுமாக வீதியில் தேங்கி இருந்த தண்ணீரினால் நனைந்து போனார்கள். அந்தத் தண்ணீர் இவர்களது தலையில் இருந்து கால் வரைக்கும் நனைத்துவிட்டது. அந்த வீதியில் தேங்கி இருந்த தண்ணீர் இப்போது இவர்கள் மேலிருந்து வடிய ஆரம்பித்தது.

உடனே அந்த தகப்பனுக்கு பயங்கரமான கோபம் வந்துவிட்டது. சற்று மகனோடு சென்று ஓய்வெடுத்துவிட்டு வரலாம் என்று சென்றால் இந்த கார் வந்து கழிவு நீரை எங்கள் மேல் அடித்துவிட்டு செல்கின்றதே என்று அவருக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. எனவே அந்த காரை கல்லால் எறிய வேண்டும் என்று நினைத்து வீதியோரத்தில் கல்லைத் தேடினார். அப்போது அங்கே ஒரு சிறிய கல்லொன்று அவரது கண்களுக்கு அகப்பட்டது. உடனே ஓடிச் சென்று அந்தக் கல்லை எடுத்து, காரை நோக்கி எறிவதற்காக திரும்பினார். அப்போது அவருக்கு பின்பதாக யாரோ பெரிதாக சிரிக்கும் சத்தம் கேட்டது. நான் கோபத்தில் இருக்கின்றேன், யார் இந்த நேரத்தில் அதுவும் எனக்கு அருகில் இருந்து சிரிப்பது என்று கோபத்தோடு திரும்பிப்பார்த்தார். அங்கே சிரித்துக் கொண்டிருந்தது யாருமல்ல, அவருடைய அந்த சிறிய மகன் தான். அவன் தன் தகப்பனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான். அப்போது அந்த தகப்பனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர் இவ்வாறு மகனைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்திற்குள் அந்த கார் அவர்களைத் தாண்டிச் சென்றுவிட்டது. இப்போது அந்த தகப்பனுக்கு இருந்த கோபமும் குறைவடைய ஆரம்பித்தது.

அப்போது அவர் தன் மகனின் அருகாகச் சென்றார். ஏன் திடீரென இவன் இவ்வாறு சிரிக்கின்றான்? என்ன இவனுக்கு நடைபெற்றது என்று பார்த்த போது அவன் தன் தகப்பனைப் பார்த்து கேலி செய்து சிரித்துக் கொண்டிருந்தான். "அப்பா உங்களைப் பாருங்கள், எவ்வாறு நீங்கள் நனைந்து விட்டீர்கள்? உங்கள் தலையிலிருந்து தண்ணீர் வடிந்து கொண்டிருக்கிறது, உங்கள் உடைகள் எல்லாம் எப்படி நனைந்துவிட்டது, உங்களைப் பார்க்கும் போதே சிரிப்பாக இருக்கிறது" என்று மிகவும் சந்தோஷமாய் சிரித்துக் கொண்டிருந்தான். அந்த சிறிய மகன் தனது மழலை மொழியால் இவ்வாறு சொல்லி சிரித்ததைப் பார்த்த தகப்பனுக்கு இருந்த கோபம் எல்லாம் மறைந்து அவரும் சிரிக்க ஆரம்பித்தார். தன் மகன் எவ்வளவு சந்தோஷப்பட்டு சிரிக்கின்றானே என்று அவருக்குள் ஒரு இனம்புரியாத சந்தோஷம் உண்டாகியது. எனவே அவர் எறிவதற்காக எடுத்த கல்லை தூரமாய் தூக்கிப் போட்டுவிட்டு அவரும் சந்தோஷமாய் தன் மகனை

கேலி செய்ய ஆரம்பித்தார்; "உன்னைப் பார், நீயும் கூட எவ்வளவு நனைந்து விட்டாய், உன் தலையெல்லாம் தண்ணீர் வடிந்து கொண்டிருக்கிறது. உன்னைப் பார்க்கும் போதும் சிரிப்பாகத் தான் இருக்கிறது" என்று அவரும் சேர்ந்து சிரிக்க ஆரம்பித்தார். அவ்வாறே இருவரும் சிரித்துக் கொண்டே தொடர்ந்து நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

அப்போது அந்த தகப்பன்: தனக்குள் இருந்த கோபம் இல்லாமல் போய்க் கொண்டிருந்ததையும், தான் எவ்வளவு கோபம் கொண்டேன் என்பதையும் உணர்ந்து கொண்டார். தனக்கு ஏற்பட்ட கோபத்தில் ஒரு சில செக்கன்கள் மகன் சிரிப்பதற்கு தாமதித்திருந்தாலும் அந்தக் கல்லை எடுத்து காரின் மேல் எறிந்திருப்பேனே, அதனால் எவ்வளவு விளைவுகள் ஏற்பட்டிருக்கும். என் மகனின் அந்த மழலைச் சிரிப்பு என்னை எப்படி மாற்றிவிட்டது. இந்த பிரச்சினையை நான் எப்படிப் பார்த்தேன் - ஆனால் எனது மகன் அதனை எப்படிப் பார்த்தான்? அவன் அந்த பிரச்சினையை சந்தோஷமாய் - மகிழ்ச்சியாய்ப் பார்த்தான். ஆனால் நான் கோபப்பட்டு ஆத்திரப்பட்டு காரியங்களை செய்ய முனைந்தேனே என்று தனக்குள் உணர்ந்தவராய் மகனுடன் சந்தோஷமாய் தொடர்ந்து நடந்து செல்ல ஆரம்பித்தார்.

ஆம் நண்பர்களே நம்முடைய வாழ்க்கையில் நாம் சந்திக்கின்ற ஒவ்வொரு பிரச்சினைகளும் நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சம்பவங்களும் நாம் தொடர்பு கொள்கின்ற ஒவ்வொரு மனிதர்களுடனும் நாம் எவ்வாறு எதிர்கொள்கின்றோம் என்பதில் தான் நம்முடைய வாழ்க்கையின் சந்தோஷம் அடங்கியிருக்கிறது. நம்முடைய வாழ்க்கை சந்தோஷமாய் அல்லது துக்கமாய் செல்கின்றது என்றால் அதற்கு காரணம் மற்ற மனிதர்களோ அல்லது எமக்கு ஏற்படுகின்ற சம்பவங்களோ காரணமல்ல, மாறாக நாம் அதை எவ்வாறு எதிர்கொள்கின்றோம் என்பதில் தான் அடங்கியிருக்கிறது. இந்த நாட்களில் நாம் நமக்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு சம்பவங்களிலும் மற்றவர்கள் எம்மை பாவித்து நன்மை பெறுகிறார்கள், நம்மை பயன்படுத்திவிட்டு இறுதியில் கைவிட்டுவிடுகிறார்கள் என்று சிந்தித்து நாம் நமக்குள் நம்மை இறுக்கமாக்கி கடுமையாக நடந்து கொள்கின்றோம். இதனால் நாமும் துன்பப்பட்டு நம்முடன் இருப்பவர்களையும் துக்கப்படுத்துகின்றோம். சிறுபிள்ளைகளைப் போன்று எம்முடைய வாழ்க்கையிலும் அனைத்து காரியங்களையும் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வோம். வாழ்க்கை என்றும் மகிழ்ச்சியானதாய் இருக்கும். **1யோவான் 1:4 உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்.**




## வாலிபர் வளாகம்

○ போதகர் வேதநாயகம் சுமணன்

# தேவ சாயல்

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!**

இவ் வருடத்தின் எட்டு மாதங்களைத் தாண்டி தேவ கிருபையினால் நாம் சுகத்துடனும் பெலத்துடனும் இருக்க தேவன் பாரட்டின அவருடைய தயவுக்காய் நாம் அவருக்கு நன்றி செலுத்துவோம்.

வாலிப வயதினிலே எண்ணத்திலோ – நடவடிக்கையிலோ பெரும்பகுதியை சத்துருவானவன் வஞ்சகமாய், தந்திரமாய் கொள்ளை கொண்டு போவதை நீ அறிவாயோ. நீ ஒரு வேளை இயேசுவை இரட்சகராக/ மீட்பராக உன் வாழ்வில் அவரை ஏற்றுக் கொண்டிருக்கலாம் அல்லது ஆண்டவருக்கும் உனக்கும் எந்தவிதமான தொடர்பும்/ இணைப்பும் இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கலாம். **நீ எந்தப்பகுதியில் இருக்கிறாய்?**

ஆதியிலே மனிதனை உண்டாக்கிய தேவனின் எண்ணம் - விருப்பம் எல்லாம் இவ் உலகத்திலே மனிதன் மூலமாக தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றுவதே. அவனோடு தான்

இணைப்பில் இருக்க வேண்டும். தேவனின் திட்டத்திற்கும், தேவ இணைப்பிற்கும் தேவன் விசேஷித்தவிதமாக தன்னுடைய சாயலின்படி உருவாக்கிய மனிதன் அதை இழந்தது தான் மிகவும் துக்கமான செய்தியாகும். காரணம்; பாவத்தின் பிடியில்/ஆதிக்கத்தில் மனிதன் சிக்கிக் கொண்டான், தேவனின் அழகான திட்டத்தை அசிங்கமானதாக (விரும்பப்படாத) காரியமாக மாற்றிப் போட்டான்.

---

**ஆபத்தான நேரத்திலும் தேவ சாயலை வெளிப்படுத்திய யோசேப்பு, தானியேல், எஸ்தர் போன்ற மனிதர்களின் வாழ்வில் இருந்து தியானிப்போமாக.**

---

## யோசேப்பு:-

**இவனது பெயரைக் கேட்டதுமே போத்திபார் என்பவனின் மனைவியின் செயலும், யோசேப்பின் பரிசுத் தத்தின் சிகரத்தை அடைய அவளுடைய கையில் தன் மேலா டையை விட்டுவிட்டு சிட்டுக்குருவி போல பறந்த காட்சி எம் அநேகருக்குத் தெரியும். கூடவே ஒரு சவாலும் கூட.**

**“தேவ சாயல் அது பரிசுத்தமே!”** காரணம்: கர்த்தர் யோசேப்போடே இருந்தார். மாத்திரமல்ல மற்றவர்களும் கண்டார்கள். கர்த்தர் யோசேப்போடே கூட இருக்கிறார் என்றும் தேவசாயல் உன் வாழ்வில் உள்ளும் புறமும் காணப்பட தீவிரமாக தீவிரம் காட்டுவாயா? தாய், தகப்பன், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இல்லாத ஒரு அந்நிய தேசத்திலே தான் யோசேப்பின் வாழ்வில் தேவ சாயல் வெளிப்பட்டது.

---

**முக்கியமாக சபை, சபை மக்கள், ஆவிக்குரிய கூட்டத்தினர், திருப்பந்தி எடுப்போர் மத்தியில் மாத்திரம் பரிசுத்தத்தை மேன்மையாய் பார்ப்பது போல் காண்பிக்காமல் வித்தியாசம் வித்தியாசமான சூழ்நிலையிலும் யோசேப்பின் வாழ்விலிருந்து வெளிப்பட்ட தேவ சாயல் உன் வாழ்விலும் பலமாக, உறுதியாக வெளிப்பட ஒப்புக்கொடுத்து வாழ்வாயா?**

---

## தானியேல்:-

கிறிஸ்தவ உலகத்தில் இந்தப் பெயரை கொண்டிருப் போருக்கு குறைச்சல் இல்லை. அநேகர் இப் பெயரை தங்கள் பிள்ளைகளுக்கு இட்டு மகிழ்கின்றார்கள், இது நல்ல வரவேற்கத்தக்கது. (பெயர் வைப்பது ஒவ்வொரு பெற்றோரின் தீர்மானம்)

ஆனால் வேதம் காட்டும் தானியேல் வித்தியாசமானவன். **அவன் மாத்திரமல்ல, அவனை சூழ உள்ளோரும் அவ்வாறு மாறிவிடும் அளவிற்கு தாக்கத்தை உண்டுபண்ணும் ஓர் அழகிய தேவ மனிதன். தீ பொறி போன்றவன்.**

கைதியாக, அடிமையாக, அந்நிய தேசத்தில் அப்பம் இல்லாமல் இருக்கும் பரிதாபத்துக்குரிய நிலையில் இருந்தாலும் தேவ சாயலே முக்கியம் என வாழ்ந்தவன். அரண்மனைச் சட்டமானாலும் அது அவனை அசைக்கவில்லை. ராஜபோஜனம் அவன் வாழ்வில் தேவசாயலை இழக்க வைக்க முடியவில்லை. **தேவனுக்கான வைராக்கிய நிலையே இன்றைய தேவை. அதுவே தேசத்தின் தேவையும் கூடவே.**

மனிதர்களைப் பிரியப்படுத்தி தேவனை துக்கப்படுத்த ஒரு போதும் உன் வாழ்வில் அனுமதியாதே. தேவனைப் பிரியப் படுத்தும் மனிதன் ஒருவேளை மனிதர்களிடம் வெறுப்பை பெறலாம். என்றாலும் கூட அதுவே விலையேறப்பெற்றது. தானியேல் அதை நன்கு அறிந்திருந்தான். சிங்கத்தின் கெபி கூட தானியேலை சேதப்படுத்த முடியவில்லை.

---

*காரணம்: தேவசாயலை சீர்குலைக்கும் எந்த தீர்மானங்களுக்கும்/ முடிவுகளுக்கும் தன்னை விற்றுப்போடாமல் விசுவாசத்திலும் உண்மையிலும் நடக்கும் ஓர் வாழ்வு.*

---

## எஸ்தர்:–

செத்தாலும் சாகிறேன்; நான் அழைக்கப்படாமல் இருக்கும் போதே ராஜாவின் சமூகத்தில் பிரவேசிப்பேன் என்று கூறினது மட்டுமல்ல, அதை செய்தும் காண்பித்த தேவசாயல் வெளிப்பட்ட தேவபிள்ளை.

**ஒரு போதும் மற்றவர்கள் அழிந்து போவதை விரும்பாத நல்ல மன நிலை தான் எஸ்தருக்குள் ஊற்று எடுத்துக் கொண்டே இருந்தது.** விசேஷமாக என் ஜனங்கள், தேவன் தன்னுடைய நோக்கத்திற்காக பிரித்து எடுத்தவர்களின் அழிவை நான் ஒரு போதும் பார்க்கமாட்டேன், அதில் பிரியப்படவும் மாட்டேன், கூடவே மௌனமாகவும் இருக்கமாட்டேன். என்னால் இயன்றதை (ஒரு பெண்ணாக இருந்தும் கூட) செய்வேன். தேவ ராஜ்யத்திலே ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும்

என்று விரும்பி, **2பேதுரு 3:9 தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்: ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.** என்ற தேவனின் மனநிலையை கொண்டவளாகவே எஸ்தரும் காணப்பட்டாள் (கெட்டுப் போகாமல் - அழிந்து போகாமல்).

---

உன் குடும்பம் மாத்திரம் பாதுகாக்கப்பட்டால் மாத்திரம் போதாது தம்பி, தங்கையரே. அல்லது நீ போகும் திருச்சபை மாத்திரம் பாதுகாக்கப்பட்டால் போதாது. அல்லது உன் கிராமம் மாத்திரம் பாதுகாக்கப்பட்டால் போதாது. **தேவ சாயல் என்பது ஒருவம் கெட்டுப்போகக்கூடாது.** ஆமான் என்பவனினால் துர்ச்செய்தி அனுப்பப்பட்ட அத்தனை தேசத்திற்கும் நற்செய்தியை அனுப்பி வைக்கிறாள் எஸ்தர் என்னும் அனாதை.


---

நீ யாராக இருந்தாலும் அது பொருட்டல்ல. (உறவை இழந்து, சரியான வசதி வாய்ப்பு இல்லாமல், மற்றவர்கள் உங்களை கணக்கு எடுக்காமல் இருந்தாலும்) ஆனால் தேவ சாயலை வாஞ்சித்து அதை வெளிப்படுத்தும் எஸ்தரைப் போல் பிறரின் வாழ்வில் ஜீவன் வெளிப்பட சத்துருவின் திட்டம் தவிடு பொடியாக இன்றே ஆண்டவர் கரத்தில் உன்னை அர்ப்பணிப்பாயா.



## ஜெபிக்கலாமா

அன்பின் ஆண்டவரே,
என்னையும் உம் சாயலாக
இந்த நாளிலிருந்து மாற்றி
பரிசுத்தத்திற்கும்,
மற்றவர்களில் தாக்கத்தை
உண்டுபண்ணி உம்மை
காண்பிக்கவும், மற்றவர்கள்
அழிவதை நான் என்னால்
இயன்ற மட்டும் தடுக்க உம்
பெலத்தை என் வாழ்வில்
தாரும். - ஆமென் -



# ஜீவ அப்பம் நானே!

ரேமா

**அ**ப்பம் என்றவுடனே நம் எல்லோருக்கும் ஆசை தான். நம் நாவும், மனதும் சுவைக்க விரும்பும் ஆகாரம் தான். **ஆனால் இயேசு தன்னை ஜீவ அப்பம் என்று சொல்வதும் சிந்திக்க வேண்டிய ஓர் நல்ல வார்த்தையே.**

**உணவு மனிதனின் சரீரத்திற்கு (வாழ்வுக்கு) அத்தியாவசிய மானது. இதைக் காட்டிலும் நித்திய வாழ்விற்கு தேவையான ஒன்று தான் ஜீவ அப்பமாகிய இயேசு.**

அருமையானவர்களே, ஐந்து ஆயிரம் பேருக்கு அதிகமானவர்களுக்கு உணவு அளித்து முடிந்த பின்பு தான், இயேசு இந்த போஜனத்தை உட்கொள்பவனுக்கு மறுபடியும் பசியும் தாகமும் உண்டாகும். ஆனாலும் நான் கொடுக்கும் போஜனத்தையும் பானத்தையும் பானம் பண்ணுகிறவனுக்கு ஒருக்காலும் பசியுண்டாகாது, தாகமுண்டாகாது (யோவான் 6) என்றார்.

நான் கொடுக்கும் அப்பமோ உலகத்தின் மீட்புக்காக என்னுடைய சரீரமாயிருக்கிறது என்று தன்னுடைய சிலுவை மரணத்தை சுட்டிக்காட்டுகின்றார். தன்னை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்றும் உறுதிபட தெளிவுபடுத்துகின்றார்.

**உன் வாழ்விலும் வெறும் சாதாரண அப்பம் போன்ற காரியங்களுக்காக இயேசுவை பின்பற்றாமல் ஜீவ அப்பமாகிய அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்படவும் உயிர்த்தெழுதலின் சாயலில் பங்கடையவும் அர்ப்பணிப்பாயா.**

இந்த உபதேசத்தை கேட்பவர்கள் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்.

**இயேசுவை பின்பற்ற தீர்மானி. அதுவே மெய்யான, நித்தியமான வாழ்வும் சந்தோஷமான வாழ்வும்.**



# உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் உனக்கு கட்டளையிடுவார்




○ திருமதி. J.பிலிப்

ஒரு கிராமத்தில் இரு சகோதரிகள் தோட்டம் செய்ய ஆரம்பித்தார்கள். நிலத்தைப் பண்படுத்தி மிளகாய் கன்றுகளை நாட்டினார்கள். அதில் ஒரு சகோதரி மிகவும் உற்சாகமாய் தன்னுடைய தோட்டத்தை கவனமாய் பராமரித்து வருவாள். அது மட்டுமல்ல கன்றுகளை எப்படி பராமரிக்க வேண்டும் என்ற காரியங்களை குறித்து ஆராய்ந்து, விசாரித்து தோட்டத்தைக் கவனித்து வருவாள். மற்றைய சகோதரி அலட்சியமாய் தன்னுடைய தோட்டத்தை பராமரித்து வந்தாள். ஒரு சில மாதங்களின் பின் உற்சாகமாய் தோட்டத்தை கவனித்து வந்த சகோதரியின் மிளாகாய்க் கன்றுகள் அழகாக பூக்க ஆரம்பித்துவிட்டன. இதைப் பார்த்த அலட்சியமாய் தோட்டத்தை பராமரித்து வந்த சகோதரிக்கு பொறாமை தாங்க முடியவில்லை. காலையில் இருட்டுடன் எழுந்து உற்சாகமாய் பராமரிக்கிற தோட்டக்காரியின் மிளாகாய் கன்றுகளின் பாத்திகளை உடைத்து தண்ணீர் முழுவதையும் தன்னுடைய மிளாகாய் கன்றுகளுக்கு வரும்படி செய்வாள். இதைப் பார்த்த உற்சாகமுள்ள சகோதரியோ எவ்வித வேறுபாடுகளும் காண்பிக்காமல், கோபப்படவோ - எரிச்சல்படவோ - சண்டை போடவோ முயலவில்லை. மாறாக அவளுடைய தோட்டத்திற்கே நிறைய நீர் முதலில் போகும்படி செய்து பின்பு தன்னுடைய தோட்டத்தைக் கவனிப்பாள்.

இதைக் கவனித்த அயல் தோட்டக்காரர்கள், ஏன் நீ இப்படி செய்கிறாய்! அவளிடம் இரண்டு கேள்வி

களைக் கேட்டு, நன்றாக ஏசிவிட்டு வா என்பார்கள். ஆனால் உற்சாகத்துடன் தோட்டத்தைக் கவனிப்பவளோ: **என்னுடைய செய்கைக்குத்தக்க பலனை நான் பெற்றுக்கொள்வேன்** என்பாள். நாட்கள் கடந்தன, மிளாகாய் பழம்பிடுங்கும் காலம் வந்தது. அலட்சியமாய் தோட்டத்தைக் கவனித்து வந்தவளுடைய தோட்டத்தின் மிளாகாய் பழங்கள் பூச்சி பிடித்து நல்ல பலனைப் பெற முடியாமல் போய்விட்டது. **உற்சாகமாய் தன்னுடைய தோட்டத்தை மிகவும் கவனமாய் பார்த்து தன்னுடைய செய்கைக்கு ஏற்ற பலன் கிடைக்கும் என்ற நிச்சயத்துடன் செயற்பட்டவளுடைய வாழ்க்கையில் மிளாகாய் தோட்டம் மூலம் அதிக மான பலனைப் பெற்றாள்.**

அருமையான சகோதரிகளே வேதாகமத்தில் **ரூத்தின் புத்தகம் 2:12 உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக.** என்று எழுதப்பட்டுள்ளது. உன்னுடைய நல்ல செய்கைக்குத்தக்க பலனை நீ கண்டு அனுபவிக்க விரும்புகிறாயா? நீ செய்ய வேண்டிய காரியங்கள் உண்டு. **உன் கையில் இருக்கும் அனல் சஞ்சிகையின் பெண்கள் பகுதி உன்னுடன் பேச உன் இருதயத்தை திறப்பாயாக.** அப்போது உனக்கு பெரிய பலன் உண்டாகும்.

சகரியாவும் எலிசபெத்தும் வயது சென்றவர்கள். அவர்களுக்கு பிள்ளையில்லாதிருந்தது. **எலிசபெத் மலடியாயிருந்தாள் என லூக்கா 1:7**இல் வாசிக்கின்றோம். தேவதூதன் மரியாளை சந்தித்து மலடியென்னப்பட்ட எலிசபெத்துக்கு இது ஆறாம் மாதம் என்று சொன்னவுடன், மரியாள் சந்தோஷத்துடன் சகரியாவின் வீட்டிற்குள் பிரவேசித்து எலிசபெத்தை வாழ்த்தினாள். **மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்ட போது அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று.** எலிசபெத்தும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டாள். மரியாளுடைய வாழ்த்துதல் வல்லமையுள்ளதாக இருந்திருக்க வேண்டும். எலிசபெத்தை வாழ்த்தியதின் நிமித்தம் ஆண்டவருடைய தாயார் "பாக்கியவதி" என்ற வாழ்த்துதலை மரியாள் பெற்றுக் கொள்கிறாள்.

அருமையான சகோதரியே, மற்றவர்களுடைய வாழ்க்கையில் சந்தோஷமான காரியங்கள் நடைபெறும் போது இது எப்படி? என்று விமர்சனம் செய்து கொண்டிருக்கிறாயா? அல்லது அவர்களுடைய சந்தோஷத்தில் நீயும் முழுமனதுடன் பங்கு கொள்கின்றாயா? சிந்தித்துப்பார்! **"உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக"**

**விதவையும், மகனும் சாப்பிட்டு செத்துப்போக ஆயத்தப்படுத்துகிறாள். அந்நேரம் அவ் வீட்டிற்கு போகிறார் எலியா தீர்க்கதரிசி. நீ போய் எனக்கு ஒரு சிறு அடையைப் பண்ணி பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம் என்றார். அவள் போய் எலியாவின் சொற்படி செய்தாள். அவளும், இவனும், அவள்**

**வீட்டாரும் அனேக நாள் சாப்பிட்டார்கள். (1இராஜாக் கள் 17:15-16)** அது மட்டுமல்ல பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை. கலசத்தின் எண்ணை குறைந்து போகவும் இல்லை. சகோதரியே தேவ மனிதன் கேட்டது ஒரு சிறிய அடை. அதை அந்த பெண் அந்த தேவ மனிதன் சொன்னபடி செய்ததின் நிமித்தம் பெரியதோர் ஆசீர்வாதம். **சிறிய காரியத்திலும் உண்மையாய் தேவ மனிதர்கள் சொற்படி செய். அப்போ விதவையைப் போல உன் செய்கைக்கு தக்க பலனைக் கர்த்தர் உனக்கு கட்டளையிடுவார்.**

**அன்னாளின் கர்ப்பத்தை கர்த்தர் அடைத்த படியினால் அவளுடைய சக்களத்தி அவளை மன மடிவாக்குவாள். அதிலும் ஆலயத்திற்கு செல்லும் சமயத்தில் வருஷந்தோறும் அந்தப் பிரகாரமாய் செய்வாள். அவள் சாப்பிடாமல் அழுது கொண்டி ருப்பாள். (1சாமுவேல் 1:7)** ஒரு நாள் அன்னாள் எழுந்திருந்தாள், கர்த்தருடைய ஆலயத்திற்குள் சென்றாள். மனங்கசந்து அழுது கர்த்தரை நோக்கி தன்னுடைய சிறுமையைப் பார்த்து பொருத்தனை யோடு ஒரு ஆண் குழந்தைக்காய் விண்ணப்பம் பண்ணினாள். **இந்த பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன், நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்கு கட்டளையிட்டார் என்றாள் (1சாமுவேல் 1:27).** அன்னாள் சக்களத்தியை எதிர்த்து பேசவில்லை. மாறாக தேவ சமூகத்தில் தன் இருதயத்தை ஊற்றிவிட்டாள்.

உன்னுடைய விண்ணப்பம் கேட்கப்படவில் லையா? உன்னை ஆராய்ந்து பார்? **கடந்த நாட்களில் யாரை துக்கப்படுத்தி, விசனப்படுத்தி யிருக்கிறாயா? மனந்திரும்பு! அடைத்த கர்ப் பத்தை திறந்த தேவன் உன்னுடைய அடைபட்ட பொக்கிஷங்களை திறக்க ஆயத்தமாய் இருக்கிறார்.** வருஷந்தோறும் சக்களத்தி அன்னாளை துக்கப்படுத்துவாள், ஆனால் அன்னாள் தேவ ஆலயம் போவதை நிறுத்தவில்லை. தேவ சமூகம் போய் வெற்றி பெற்றாள். **"உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் கட்டளையிடுவாராக".**

அருமையான சகோதரியே. **மரியாள் வாழ்த்தினாள்: வாழ்த்து தலைப் பெற்றுக் கொண் டாள். சாரிபாத் விதவை தேவ மனிதன் சொற்படி செய்தாள்: வீட்டில் இருந்த குறைவு நிறைவாகியது. அன்னாள்தன்தேவையை தேவ சமூகத்தில் ஊற்றி னாள்: கேட்டதைப் பெற்றுக் கொண்டாள்.**

மரியாள், சாரி பாத் ஊர் விதவை, அன் னாள் தங்களுடைய செய்கைக்கு தக்கபலன் களை அனுபவித்தார் கள். உன்னுடைய நல்ல செய்கைக்கு தக்க பலனை நீயும் பெற்றுக் கொள்வாய்.

**ஒபதியா 1:15b**
**நீ செய்தபடியே உனக்கும் செய்யப்படும்: உன் செய்கை யின் பலன் உன் தலையின் மேல்திரும்பும்.**



# பாடுகளின் நடுவே உன் நம்பிக்கை

○ J. கிறேசியன்




**அ**ன்பு சகோதரா, சகோதரி மறுபடியும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்கள். வருடம் ஆரம்பித்து எட்டு மாதங்கள் சீக்கிரமாய் எம்மைவிட்டு கடந்து சென்று கொண்டே இருக்கிறன்றது. இதற்குள்ளாக எத்தனை பாடுகள், சோதனைகள், மனக்குழப்பங்கள், கேள்விகள்...

**இதன் நடுவிலே அன்பு சகோதரா, சகோதரி தேவன் கஷ்டங்களின் பாதை வழியாக உங்களை அழைத்துச் செல்வதாக நீங்கள் நம்பினால் நிச்சயம் அது ஒரு மேலான ஆசீர்வாதத்தின் பகுதியை நோக்கித் தான் செல்கின்றது என்று நீங்கள் உறுதியாக விசுவாசிக்கலாம்.** ஆனால் இந்த கஷ்டமான பாதை உனக்கு நம்பிக்கையை கொடாமல் சோர்வு, சலிப்பு, விரக்தி, எரிச்சல், அவநம்பிக்கை ஆகியவற்றை தருமெனில் இந்தக் கஷ்ரங்கள் தேவனால் அனுமதிக்கப்பட்டவை என கூற இயலாது.

தேவ பிள்ளைகள் எண்ண வேண்டியது கர்த்தர் உங்களை சோதனையான சூழ்நிலையின் வழியாக அழைத்து வருகின்றார் என்று எண்ணினால் பாடுகளும், கஷ்ரங்களும் உங்களை வருத்தப்படுத்தினாலும் மறுபுறம் ஒரு விசேஷித்த நம்பிக்கையுணர்வும் விசுவாச சிந்தையும் எம்மை உற்சாகப்படுத்திக் கொண்டேயிருக்கும்.

**இதனால் தான் தாவீது இப்படி கூறுகின்றார்: சங்கீதம் 42:5 "ஆத்துமாவே தேவனை நோக்கி காத்திரு"**

தாவீதை தேவன் நெருக்கமும், உபத்திரவமும் நிறைந்த ஒரு பாதை வழியாகத் தான் அழைத்துச் சென்றார். அங்கே அவன் பலவேளை மனமுடைந்து, அழவும், புலம்பவும் தான் செய்தான். ஆனாலும் தான் போகும் பாதை ஒரு விடியலை நோக்கித் தான் செல்கின்றது. ஒரு ஆசீர்வாதப் பகுதியை நோக்கி தான் போகின்றது என்ற நம்பிக்கை இருந்தது. இதனால் தான் பாடுகள் - கஷ்டங்கள் - வேதனையின் நடுவே அவன் **"ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய்? நீ கர்த்தரை நோக்கி காத்திரு"** என்று தன்னை திடப் படுத்தினான்.

**பக்தன் யோபு மிகுந்த உபத்திரவங்களின் நடுவில் "என் மீட்பர் உயிரோடு இருக்கிறார்" என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.**

இதே போன்று தேவனுடைய உறவை வாழ்க்கையில் கண்டு கொண்ட மனிதன் தனக்கு முன்பாக வருகின்ற எந்த ஒன்றையும் வித்தியாசமான ஆவிக்குரிய கண்களோடு பார்ப்பான்: சிலுவையின் பாடுகள் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தை பார்த்து இயேசு பொறுமையாக சகித்தார். அன்பு சகோதரா, சகோதரி பாடுகளும் கஷ்டங்களும், சோதனைகளும் உங்களை புலம்ப வைக்கின்றதோ? நம்பிக்கையோடு — விசுவாசத்தோடு பாடுகளை சந்தியுங்கள். விரைவில் மகிமையான காலங்கள் உங்களுக்கு தென்படப்போகின்றது.

**சத்தியத்தின் பாதையில் இன்றைய நஷ்டங்கள் தற்காலிகமானவை. ஆனால் நாளை வரப்போகும் நன்மைகளோ நிரந்தரமானவை.**

---

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

*எலியாவின் தேவனுக்கு மகிமையை கொண்டு வந்தது: நோவாவிற்கு தேவ கிருபையை கொண்டு வந்தது. இது எது?*

இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## அனல் 2016 யூலை – ஆகஸ்ட் மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

## சொப்பனம்

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.




# தேவபணியாளர் பட்டறை!

போதகர் வே.மகாராஜா

எலியா — எலிசாவின் ஊழியங்களின் அடிப்படையில்

## தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக

# ஜனங்களின் குறைவில் நிறைவை உருவாக்கும் ஊழியம்!

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

**11இராஜாக்கள் 4:21 அப்பொழுது அவள் ஏறிப்போய், அவனை தேவனுடைய மனுஷன் கட்டிலின்மேல் வைத்து, அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக்கொண்டுபோய்,** இங்கே எலிசாவைக் கேட்காமலேயே அவனுடைய கட்டிலில் மரித்துப் போன தன்னுடைய மகனை கிடத்தினாள். ஏனென்றால் அவளுக்குத் தெரியும், தன்னுடைய வேதனை, துக்கத்தை, பாரத்தை இறக்கி வைக்கின்ற ஒரு இடம் அது தான் என்பது. எங்களுடைய இனிமையான, சந்தோஷமான நேரத்தை எங்களுடைய அனுமதியில்லாமல் இன்னொருவர் எடுப்பதற்கு அனுமதிப்போமா? நாம் ஆண்டவருடைய ஊழியத்திற்காய் அழைக்கப் பட்டவர்கள். எங்களுக்கு கர்த்தர் ஏன் ஊழியத்தை தந்தார்? அதை யாருக்கு செய்தவற்காக தந்திருக்கிறார்? என்பதனை புரிந்து கொள்ள வேண்டும். உண்மையிலே விசுவாசிகள் (மக்கள்) இல்லாவிட்டால் எங்களுக்கு ஊழியமும் இல்லை. அவர்களுடைய துன்பத்தை எம்முடைய சுமையாய் கருதுகின்ற நாட்கள் வரவேண்டும். தேவனுடைய ஊழியத்தைச் செய்துவிட்டு கொஞ்சம் இளைப்பாறலாம் என வந்த எலிசாவுக்கு இளைப்பாறும்இடத்தில்தலைசாய்க்க முடியவில்லை. இயேசு சொன்னார்: நரிகளுக்கு குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு. ஆனால் மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடம் இல்லை என்று. அவ்வளவாய் ஆத்துமாக்களின் காரியத்தையே இயேசுவும் செய்தார்.

**எங்களுக்கு முதலாவது ஆண்டவரும் - அவருடைய ஊழியமும் தான்.** இதிலே எலியாவும் - எலிசாவும் சிறப்பாக செயற்பட்டார்கள். எலியா செல்கின்ற போது எலிசாவிடம் கேட்டான்: நான் போகிறேன், உனக்கு என்ன வேண்டும்? அதற்கு எலிசா உமது ஆவியின் வரம் இரட்டிப்பாய் எனக்கு வேண்டும் என்றான். எலிசா எலியாவைப் பார்த்து, பார்த்து, அவனைப் பின்பற்றி இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நிலையில் இருந்தான். இன்னும் அதிகமாய் ஆண்டவருக்காய் செய்ய வேண்டும் என்றிருந்தான். எலியா தானே மரித்துப் போன மகனைத் தூக்கிக் கொண்டு சென்று தன்னுடைய கட்டிலில் கிடத்தினான். ஆனால் சூனேமியாள் மரித்துப் போன தன்னுடைய மகனைத் தூக்கிச் சென்று எலிசாவிடம் அனுமதி பெறாமல் அவனுடைய கட்டிலில் கிடத்தினாள். அங்கே தான் எங்களுக்கு ஆறுதல் கிடைக்கும், **தேவனுடைய மனுஷர்களாகிய இவர்கள் தேவனிட மிருந்து விடுதலையை, ஆறுதலை, இழந்து போன சமாதானத்தை பெற்றுத்தரு வார்கள் என்பதை அந்த இரண்டு பெண்களும் கண்டு கொண்டார்கள்.**

உலகத்திலே ஒரு அதிகாரத்தில் உள்ளவருக்கு உயர்வு வரவர அவர்கள் தங்களை மக்களை விட்டு தூரப்படுத்துவார்கள். ஆனால் தேவனுடைய ஊழியர்கள் தேவனால் அழைப்பை, அதிகாரத்தை பெற்ற நாங்கள் எங்களைத் தேவன் அழைத்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற வர்களாய், ஜனங்களுக்கு அண்மையாக செல்ல வேண்டும். **தேவனுடைய ஊழியத்திற்கும் உலகத்திற்குரிய ஊழியத்திற்குமுரிய ஒரு வித்தியாசம்: இவர் பாவிகளோடு போய் இருக்கிறார், பேசக்கூடாதவர்களோடு பேசுகிறார் என்று இயேசுவைப் பார்த்து சொன்னார்கள். ஊழியக்காரராகிய நாங்கள் விசுவாசிகள் பாவம் செய்கிறார்கள் என்று தெரிந்தால் அவர்களுக் அண்மையாகச் சென்று அவர்கள் தனிமையாக இருக்கும் போது அவர்களின் பாவத்தை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். அவர்கள் அதனை ஏற்றுக் கொள்வார்கள்.** எங்களுடைய அழைப்பு தேவனுக்கு அண்மையில் செல்வதும், ஜனங்களுக்கு அண்மையில் செல்வதுமே. தேவனிடம் பெற்று ஜனங்களுக்கு கொடுக்கும் முறையே கர்த்தரின் ஊழியத்தைச் செய்கின்றவர்களின் முறை. தேவனை கிட்டிச் சேராமல் ஜனங்களுக்குச் செய்யும் ஊழியம் பயனற்ற விளைவையே அறுவடை செய்யப்பண்ணும். தேவ சமூகத் தில் பெற்றுக் கொண்டதை ஜனங்களுக்கு அருகில் சென்று கொடுக்கத் தவறுவதும் நிறைவான விளைவைத் தரமாட்டாது. **எங்களுடைய வேலை கைவிடப்பட்டவர்களின் வேதனைகளை புரிந்து அவர்கள் அருகிலிருந்து ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்ய வேண்டும்.**

**எங்களுடைய படுக்கையின் நேரங்களை எத்தனைபேர் ஜெபநேரங் களாக மாற்றி இருக்கின்றோம். எங்களுடைய நிம்மதியை ஒதுக்கி வைத்து**

விட்டு. அவர்களுடைய துன்பங்களை நாம் சுமக்க வேண்டும். ஆண்டவருடைய பிள்ளைகளாய் அவர்களுடைய துன்பங்களுக்கு ஆண்டவரிடம் இருந்து பதில் பெற்றுக் கொடுக்காவிட்டால் நிச்சயமாய் ஆண்டவருடைய அழைப்பில் சரியான நிறைவைப் பெற்றுக் கொள்ள முடியாது. நான் கர்ப்ப வேதனைப்படுகின்றேன். என்னுடைய ஜெபங்களில் எப்போதும் உங்களை நினைக்கிறேன் என்று பவுல் சொல்கின்றார். அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசிகளை கட்டியெழுப்புவதும், ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்காக அவருடைய இன்பமான வாழ்வின் காலங்கள் அர்ப்பணிக்கப்பட்டது. சாரிபாத் ஊர் விதவை எரிந்து, விழுந்து பேசிய போது அதற்கு எலியா தன்னுடைய வாயால் மாறுத்தரம் சொல்லாமல் தன்னுடைய ஊழியத்தை செய்த போது: **1இராஜாக்கள் 17:22-24 (22.) கர்த்தர் எலியாவின் சத்தத்தைக் கேட்டார்: பிள்ளையினுடைய ஆத்துமா அவனுள் திரும்பிவந்தது: அவன் பிழைத்தான். 23. அப்பொழுது எலியா பிள்ளையை எடுத்து, மேல்வீட்டிலிருந்து அவனைக் கீழ்வீட்டிற்குள் கொண்டுவந்து, அவனை அவன் தாயினிடத்தில் கொடுத்து: பார் உன் பிள்ளை உயிரோடிருக்கிறான் என்று சொன்னான். 24. அப்பொழுது அந்த ஸ்திரீ எலியாவை நோக்கி: நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள்.** பலவேளை விசுவாசிகள் எங்கள் மேல் எரிந்து விழுந்தாலும் நாம் பொறுமையோடு, அமைதியாய் இருந்தால், நீர் தேவனுடைய மனுஷன் என்று அவர்களே ஒரு நாள் சொல்வார்கள். அமைதிக்கு சில பட்டங்கள் கிடைக்கும் ஆனால் அதற்கு சொற்ப காலங்கள் எடுக்கும்.

எலிசாவுக்கு கிடைத்த பதிலை பார்த்தால்: **11இராஜாக்கள் 4:28 அப்பொழுது அவள், நான் என் ஆண்டவனிடத்தில் ஒரு குமாரனை வேண்டும் என்று கேட்டதுண்டா? எனக்கு அபத்தம் சொல்லவேண்டாம் என்று நான் சொல்லவில்லையா என்றாள்.** அபத்தம் சொல்லாதேயும் என்று கூறியவள், எலிசாவும் தன்னுடைய ஊழியத்தை அமைதியாக செய்தான். **11இராஜாக்கள் 4:37 அப்பொழுது அவள் உள்ளே போய், அவன் பாதத்திலே விழுந்து, தரைமட்டும் பணிந்து, தன் குமாரனை எடுத்துக்கொண்டு வெளியே போனாள்.** மகனை உயிரோடு கொடுத்த போது அவனுக்குரிய கனத்தை அவள் கொடுத்தாள். உங்கள் மேல் யாருக்காவது பார்வை வித்தியாசமாக இருக்கிறது என்று யோசித்தால், நீங்கள் ஆண்டவர் சொன்னமாதிரி நடவுங்கள், நாட்கள் செல்லச் செல்ல அவர்களுடைய பார்வை மாற்றமடையும்.

தொடரும்...

# சரியான விடை எழுதியவர்கள்

## குறுக்கெழுத்துப் போட்டி - 74, வினா விடை - 76

**பாண்டவெட்டை**

01. ம.நிம்சிகா
02. ம.சிவகௌரி
03. எஸ்.கயா ◆
04. நிதர்சினி ◆
05. உஷா ◆
06. மதுஷா ◆
07. சி.றஜிந்தினி ◆
08. எ.துவாரகன் ◆
09. சி.ஜெரோம் ◆
10. க.பிரியதர்சினி ◆
11. மு.ஜெசிந்தா ◆
12. அ.இலங்கேஸ்வரி ◆

**நாவற்குழி**

13. சூ.ஜான்சி *

**மீசாலை**

14. ச.கெற்ஷியா

**கனடா**

15. குகன் குடும்பம்



**அனலைதீவு**

16. க.பிரகாஸ் ◆

**அளவெட்டி**

17. தெபோறா

**காரைநகர்**

18. பா.மோகனதாஸ் ◆
19. ம.மதுஷன்டேவிட் ◆
20. பா.தர்சினி ◆
21. பா.கோமதி ◆
22. லோ.வதனி ◆

◆ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

---

**இடமிருந்து வலமாக**

03. சிம்சோனின் (நியா15:14)
04. மிலாறுண்டு (நீதி 14:3)
09. செம்பு (உபா 8:9)
13. எசியோன்கேபேரில் (1இரா22:47)

**வலமிருந்து இடமாக**

02. மொர்தெகாய் (எஸ்தர்5:9)
06. சாலொமோன் (11நாளா6:1)
07. ஊசாவின் (11இரா21:18,26)
10. ஓர்மா (எண் 21:3)

**மேலிருந்து கீழாக**

01. நெகேமியா (நெகே 8:9)
05. தெமேத்திரியு (அப்19:24)

**கீழிருந்து மேலாக**

08. நிகுஸ்தான் (11இரா18:4)
11. ஆசகேல் (11சாமு 2:18)
12. பேரேஸ்ஊசா (1நாளா13:11)
13. எஸ்றா (எஸ்றா 9:3)

**குறுக்கெழுத்துப் போட்டி - 74 சரியான பதில்கள்**




ஜசிந்தா அக்கா




இந்த தலையங்கத்தை வாசிக்கும் தம்பி, தங்கச்சி உன்னுடைய அப்பா—அம்மா தானே உன்னைப் பராமரிக்கிறார்கள்! தேவ தூதர்களின் பராமரிப்பு எப்படி இருக்கும் என்று நினைக்கிறாயா?

ஆம், தேவதூதர்கள் தேவனுடைய தூதுவர் கோடான கோடி தேவதூதர்களைத் தேவன் உண்டாக்கியிருக்கிறார். எதற்காகத் தெரியுமா? பரலோகத்தில் தேவனைத் துதிப்பதற்காக, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியாக, இயேசுவோடு நடக்கும் பிள்ளைகளைப் பாதுகாக்க, அவர்களுக்கு உதவி செய்ய உண்டாக்கப்பட்டவர்களே தேவதூதர்கள். பார்த்தாயா, எவ்வளவு அற்புதம்!

வேதாகமத்திலே **லூக்கா 12:10ஆம் வசனத்திலே.... மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது**... என்று எழுதப்பட்டிருக்கிறது. அன்பான தம்பி, தங்கச்சி நீ மனந்திரும்பிவிட்டாயா? அப்படி என்றால் "என்ன அக்கா" என்று கேட்கிறாயா? இவ்வளவு நாளும் அம்மா அப்பாவிற்குக் கீழ்ப்படியாமல் இருந்தது, கெட்ட பேச்சு பேசியது, பொய், களவு, மற்றவர்களை ஏமாற்றியது, இப்படிப் பல வேண்டாத செயல்கள் நீ செய்திருக்கலாம். சில வேளை இதில் ஒன்று அல்லது இரண்டு கெட்ட பழக்கம் இருக்கலாம். எத்தனை இருந்தாலும் அத்தனையையும் மன்னிக்கும் தேவனிடத்தில் சொல்லு. தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தினால் உன்னைக் கழுவிப் பரிசுத்தமாக்கிவிடுவார். அந்த நிமிடத்தில் இருந்து நீ இயேசுவின் பிள்ளை. அந்த வேளையில் பரலோகத்திலிருக்கிற தூதர்களும் சந்தோஷப்படுகிறார்கள். பார்த்தாயா, எத்தனை அற்புதம்! எத்தனை மகிழ்ச்சி!. இதை வாசிக்கிற தம்பி, தங்கச்சி ஒரு வேளை நீ இயேசப்பாவை வணங்காத வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். உனக்கும் இந்த மகிழ்ச்சி வேண்டுமா? மனந்திரும்பு! பெற்றுக் கொள்வாய்.

இயேசப்பாவின் பிள்ளைகளே, மேலே நீங்கள் வாசித்த தேவ தூதர்கள் யாரைப் பராமரிப்பார்கள் என்று யோசிக்கிறீர்களா? யோசனையே தேவை யில்லை. உங்களைத் தான் பராமரிக்கிறார்கள். யாரும் உங்களுக்குத் தீங்கு செய்யாதபடி உங்களோடு இருந்து கண்ணும் கருத்துமாக உங்களைக் கவனித் துக் கொண்டிருக்கிறார்கள். வேதாகமத்தில் **மத்தேயு 18:10ஆம் வசனத்தில்... இந்த சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங் கள், அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்...** என்று எழுதப்பட்டிருக்கிறது. பார்த்தாயா, எத்தனை ஆச்சரியம். நீ உன் குடும்பத்தில் ஒதுக்கப்பட்ட நிலைமையில் இருக்கலாம், நீ மொக்கு என்று உன் ஆசிரியர் உன்னைக் கவனிக்காமல் இருக் கலாம். நீ அழகில்லை, நீ ஒரு சொத்தி என்று உன்னைத் தள்ளி வைக்கலாம். நீ ஏழை நல்ல உடுப்புக்களை நீ உடுத்துவதில்லை என்று உன்னை யாரும் சேர்க்காமல் இருக்கலாம். நீ கவலைப்படாதே, உங்களுக்கு இப்படி நடக்கிறதைப் பார்த்துக் கொண்டிருக்கிற தேவதூதன் சும்மா இருப்பாரா? அவர் உங்களைப் பராமரிக்கிறவர் அல்லவா? ஆகவே மின்னல் வேகத்தில் இயேசு அப்பா இருக்கும் இடம் பரலோகத்திற்குள் சென்றுவிடுவார்கள். யார் உங்களுக்கு தீமை செய்கிறார்களோ அவர்களை இயேசு சுவாமிக்குச் சொல்லிவிடுவார்கள். தூதர்கள் எப்படி உங்களைக் கவனிக்கிறார்கள் என்று பார்த்தீர்களா? ஆச்சரியமல்லவா.

பிள்ளைகளே நீங்களும் மற்றவர்களைப் பார்த்து கேலி பண்ணாமல், குறைபாடுகளைச் சுட்டிக்காட்டாமல் இருங்கள். இப்படிச் செய்தால் நீங்கள் இயேசப்பாவின் பிள்ளைகளாய் இருக்க முடியாது.

*ஒரு நாள் இயேசுவையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பத்தினர் குடும்பமாய் தேவாலயத்திற்குச் செல்லும் போது வீதியிலே ஜனக்கூட்டத்தில் ஒரு சிறு பிள்ளையைத் தவறவிட்டு விட்டார்கள். எங்கும் தேடினார்கள், பிள்ளையைக் காணவில்லை. நம்பிக்கையோடு தேவாலயம் சென்றார்கள். ஆராதனையில் விசுவாசத்தோடு இயேசுவிடம் ஜெபித்துவிட்டு வீடு வந்து சேர்ந்தார் கள். என்ன ஆச்சரியம்! அந்த சிறுபிள்ளை வீட்டிலே விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்கள். எப்படி வீட்டுக்கு வந்தாய் என்று பெற்றோர் கேட்டார்கள். அதற்கு அந்த சிறுபிள்ளை "உங்களை நான் தவறவிட்டதினால் பயந்து என்ன செய்வதென்று தெரியாமல் அழுது கொண்டு நின்றேன். அப்பொழுது நீளமான வெள்ளை நிற சட்டை போட்ட ஒருவர் என்னை வீட்டில் கொண்டு வந்துவிட்டார். பின்பு அவரைக் காணவில்லை" என்று சொன் னாள்.* பிள்ளைகளே, இந்த உண்மைச் சம்பவம் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது. **சங்கீதம் 91:11ஆம் வசனத்தில் எழுதியபடி; உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.**

பிரியமான தம்பி, தங்கச்சி உனக்கும் தனிமையான, ஆபத்தான சூழ்நிலைகள் ஏற்படலாம். பயப்படாதே! இயேசு சுவாமி தம்முடைய தூதர்களை அனுப்பி உங்களைப் பாதுகாப்பார். ஆனால் நீயோ அவரது வேத வசனத்தின்படி நடக்க கவனமாயிரு.

பிள்ளைகளே, மனிதருக்கு மட்டுமா தேவதூதரின் பராமரிப்பு? இல்லை நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலக மக்களின் பாவத்தை சுமந்து எல்லாருக்கும் விடுதலை தரும்படியாக பூமிக்கு வந்தார். ஒரு நாள் ஒலிவ மலைக்குச் சென்று ஜெபித்தார். **அப்பொழுது பிதாவே உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும். ஆயினும் என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபித்தார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி இயேசப்பாவை பலப்படுத்தினான் என்று லூக்கா 22:42இல்** எழுதப்பட்டிருக்கிறது.

பிள்ளைகளே, உங்களது சின்ன இதயங்களிலும் பாரங்கள் இருக்கிறதா? மற்றவர்களினால் காயங்கள் வந்திருக்கிறதா? துக்கம் நிறைந்திருக்கிறதா? உங்களையும் தூதன் தேற்றுவார். ஆனால் நீங்கள் இயேசப்பாவை காயப்படுத்தாமல், துக்கப்படுத்தாமல் அவரோடு இருங்கள். அவரும் தமது தூதர்களை உங்களிடம் அனுப்பி உங்களைப்பராமரிப்பார்.

**கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார் - சங்கீதம் 34:7**

## வினாவிடை – 76

01. தாவீதின் பிராணனை அழிக்க தேடுகிறவர்கள் – சங்கீதம் 63:10
02. கர்த்தர் – எரேமியா 14:2
03. தாவீது – சங்கீதம் 3:8
04. தேவனுடையவைகள் – சங்கீதம் 47:9
05. பரிசுத்த ஸ்தலத்தின் புறவாசல் – எசேக்கியேல் 44:2
06. லேவியர் – நெகேமியா 12:8
07. ஏசாயா 21:5
08. யோபு – யோபு 13:16
09. தாவீது – சங்கீதம் 25:5
10. பராக்கிரமசாலிகளுடைய கேடகம் – நாகூம் 2:3

சரியான பதில்கள்






## ஷீ மேயு
## 1873 - 1954

### உடலிலும் உள்ளத்திலும்

நற்செய்திப் பணியில் மருத்துவப் பணி மிகவும் முக்கியமானது. ஏனெனில் மனிதர்கள் இரண்டு விதங்களில் குணமடைய வேண்டியது அவசியம். ஒன்று சரீரத்தில் குணமடைதல், மற்றொன்று ஆவிக்குரிய வாழ்வில் குணமடைதலாகும்

சீன மருத்துவ மிஷனெரி ஷீமேயு இரண்டு பணிகளையும் ஒரே நேரத்தில் செய்வதற்கு ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்டார். இவர் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்களுடைய கரங்களையும், சுவிசேஷகர்களுடைய இருதயத்தையும் பெற்றிருந்தார்.

சீனாவில் பிறந்த இவர், அமெரிக்கா சென்று மருத்துவப் பட்டம் பெற்ற சீனப் பெண்மணி ஆவார். சீன தேசத்து மக்களுக்காக மருத்துவமனை ஒன்றைக் கட்டினார். ஒவ்வொரு மாதமும் 3000 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தார். மேலும் சீன செவிலியர்களுக்கு ஒரு பயிற்சித் திட்டத்தை உருவாக்க உழைத்தார். மேற்கத்திய மருத்துவ புத்தகங்களை மொழிபெயர்ப்புச் செய்தார். செவிலியர்களுக்கென்று தனியே வேதாகம வகுப்புக்களை நடத்தினார்.

1918இல் ஷீமேயு ஐந்து கிறிஸ்தவ தலைவர்களுடன் இணைந்து சீன உள்நாட்டு ஊழிய சங்கத்தை ஏற்படுத்தினார். இது ஒரு சுயநிதி சங்கமாகச் செயற்பட்டது. 1920ஆம் ஆண்டு தான் பணியாற்றி வந்த மெதடிஸ்ட் மிஷனெரி சங்கத்தை விட்டுவிட்டு "பெத்தேல் மிஷன்" என்ற புதிய ஊழியத்தை ஆரம்பித்தார். 17ஆண்டு காலத்தில் இந்த ஊழியமானது வளர்ச்சி அடைந்தது.

ஆரம்ப மற்றும் செக்கண்டரி பள்ளிகள், மருத்துவமனைகள், செவிலியர் பள்ளி, வேதாகமகலாசாலை, அனாதை இல்லம் மற்றும் ஆராதனை மையம் ஏற்படுத்தப்பட்டன.

ஷீமேயு 36 சீனக் குழந்தைகளை தன் வீட்டில் வைத்தே பராமரித்தார். ஒவ்வொரு வியாழக்கிழமையும் தன் வீட்டில் செவிலியர்களுக்கென வேதாகமக் கூட்டங்களை நடத்தி அனேக செவிலியர்களை கிறிஸ்துவுக்குள் நடத்தினார். 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் சீன கிறிஸ்தவ பெண்களில் டாக்டர் ஷீமேயு ஒருவராவார். தனது இடைவிடாத உழைப்பினால் இச் சீன மிஷனெரி இதே நாள் 1954ஆம் ஆண்டு நோயற்ற வீட்டிற்கு பயணமானார்.

**அன்பரே! உங்கள் மூலம் பிறர் எவ்விதத்தில் குணமடைந்துள்ளனர்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** நற்குணங்களோடு இணைந்திராதவனின் இதயம் இறைவனைவிட்டு வெகுதூரம் விலகியே இருக்கிறது — ஜீவ நீரோடை

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜீன் 14**

# ஹென்றி நாட்
# 1774 - 1844



## நரகத்திலிருந்து மோட்சத்திற்கு..

கிறிஸ்தவ அறிஞர் அகஸ்டினிடம் வாலிபன் ஒருவன் வந்தான். அவன் அவரிடம், இந்த உலகத்தைப் படைப்பதற்கு முன், கடவுள் என்ன செய்து கொண்டிருந்தார்? என்று கேள்வி கேட்டான். அதற்கு அவர், இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பவர்களுக்காகவே நரகத்தை ஆயத்தம் பண்ணிக் கொண்டிருந்தார் என்றார்.

இப்படிக் கேள்வி கேட்பவர்களுக்கு மட்டுமல்ல, இயேசு கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டிராதவர்களுக்கும் நரகம் ஆயத்தமாயிருக்கிறது. சுவிசேஷ செய்தியானது இன்னும் உலகத்தின் பல பாகங்களுக்கும் அறிவிக்கப்படவில்லை. அவர்கள் நரகத்திற்கு செல்ல நீங்கள் விரும்புகிறீர்களா?

ஹென்றி நாட் ஒரு சிறந்த ஆத்தும ஆதாய வீரர். கிறிஸ்துவின் அன்பை ருசிபார்த்த இவர், இயேசுவைப் பற்றி அறியாத மக்களுக்கு அறிவித்திட வாஞ்சை கொண்டார். எனவே தன்னை லண்டன் மிஷனெரி சங்கத்தின் மூலமாக, ஊழியத்திற்கு அர்ப்பணித்தார்.

தகித்தி என்ற இடம் பாலிநேசியா தீவில் உள்ளது. மக்கள் மிகவும் கொடூரர்கள். அறியாமையில் அனுதினமும் அறிவற்ற செயல்களைச் செய்வார் கள். இவர்களின் தெய்வங்களுக்கு சிறுவர்கள் பலி கொடுக்கப்பட்டனர். வயதான முதியவர்கள், உயிருடன் குழிக்குள் தோண்டி புதைக்கப்பட்டனர். 12 வயதிற்கு மேல் பெண் குழந்தைகள் கட்டாய திருமணம் செய்து வைக்கப்பட்டனர்.

கிறிஸ்தவ நற்செய்தி பரப்ப சென்ற எவரும் உயிருடன் திரும்பிய தில்லை. ஹென்றி நாட் அவ்விடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவ்விடத்திற்கே மிஷனெரியாகச் செல்வேன் என்று உறுதி கொண்டார். 1797ஆம் ஆண்டு, தகித்தி என்ற இடத்திற்கு வந்தார். அம்மொழியை மிகவும் கடினத்துடன் கற்றார். இவரு டன் வந்தவர்கள் அம் மக்களின் கொடிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுத் தங்கள் உயிரை இழந்தார்கள். பலமுறை இவர் வீட்டைவிட்டு அடித்துத் துரத்தப்பட்டார். பொருட்கள் களவு செய்யப்பட்டன. ஆயினும், அம் மக்கள் மொழியிலேயே வேதாக மத்தைக் கொண்டு வருவதற்கு மிகுந்த முயற்சி செய்து வெற்றியும் பெற்றார்.

20 வருடங்களுக்கு பின் ஒருவர் மனந்திரும்பவே, தொடர்ந்து அவ்விடத்து அரசனும் கிறிஸ்துவண்டை வந்தான். 47 வருடங்கள் அங்கு வெற்றிகரமாகத் தன் பணியை முடித்தார்.

**அன்பரே! மூடத்தனங்களில் வாழும் மக்களை மனந்திரும்பச் செய்ய முன்வருவீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: கடவுளோடு நெருங்கி ஜீவித்தவர்கள் எவரும் வாழ்க்கையை வீணடித்தவர்கள் அல்ல. — ஹோரிடியஸ் போனர்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" அக்டோபர் 2**


# சீயோன் தேவாலயம்

24, இராமையாச்செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில்

**அமைந்துள்ள எமது பிரதான ஆலயத்தில்**

**ஒவ்வொரு மாதத்தின் இறுதி வெள்ளிக் கிழமைகளிலும் மாலை 5:00 மணிக்கு**

**வியாதிப்பட்டவர்கள் . தேவையுள்ளவர்கள்**

**பிசாசின் பிடியில் உள்ளவர்கள்**

**போன்றோர்களுக்காக விசேஷித்த விண்ணப்ப ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது. இதில் கலந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**




அருமையானவர்களே, **நாம் பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.** நான் பொருளாசை இல்லாதவன் என்று சொல்லலாம் அல்லது சிந்திக்கலாம். ஆனால் ஆண்டவர் எல்லோருடனும் பேச வல்லமையுள்ளவராக இருக்கிறார். **"லூக்கா 12:15 பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்: ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்.** உங்களுடைய வாழ்க்கையிலே உலகத்தின் காரியம் முக்கியமா அல்லது ஆண்ட வருடைய இராச்சியத்தின் காரியங்கள் முக்கியமா? சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாய் இருக்கும்; ஆண்டவரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். நல்ல மேய்ப்பனாக ஆண்டவராகிய இயேசு

கிறிஸ்து இருக்கும்வரை அவர் எங்களை பசும்புல் மேய்ச்சலில் நடத்த வல்லவராய் இருக்கிறார்.

சில வேளைகளில் சில பொருட்களைக் குறித்து அல்லது முன்னேற வேண்டும் என்று தேவை யற்ற முயற்சிகள். ஆசைகள் நம்மை நெருக்குகின்றன. அந்த நேரங்களில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உலகப்பிரகாரமான காரியங்களில் சந்தோஷமாய் இருப்பதைப் பார்க் கிலும் பரலோகத்தின் ஆண்டவர் எங்களுடைய பெயரை தமது ஜீவ புஸ்தகத்தில் எழுதி வைத்திருக் கிறபடியால் அதிக சந்தோஷமாக இருக்க வேண்டும். இந்த உலகத் தில் எவ்வளவு சொத்துக்கள், ஆஸ்திகள் இருந்தாலும் பரலோ கத்தில் பெயர் இல்லை என்றால் ஒரு இலாபமும் இல்லை: ஆனால் இந்த உலகத்தில் இருப் பதற்கு கூட ஒரு வீடு உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம், ஆனா லும் பரலோகத்தில் தேவன் உங்களுக்கு நித்திய வீட்டை வைத்திருக்கின்றார்.

ஐசுவரியவான் தினம் தினம் சாப்பிட்டு வசதிபடைத்தவனாய் வாழ்ந்தான் ஆனால் லாசருவோ ஏழ்மையாக, நாயோடு நாயாக இருந்து கீழே கொட்டப்படுவதை சாப்பிட்டு வாழ்ந்தான். இந்த ஏழை லாசருவுக்குத்தான் கர்த்தர் பரலோ கத்தைக் கொடுத்தார். அருமை யான தேவபிள்ளைகளே, இந்த உலக வாழ்க்கையிலே நாம் எப்படி இருக்கின் றோம் என்பதைப் பார்த்து பரலோகத் தில் இடம் கிடைப்பதில்லை. நாம் ஆண்டவருக்காக உண்மையாக ஜீவிப்பதால்தான் பரலோகம் கிடைக் கிறது. இந்த உலகத்திற்கு நிர் வாணிகளாக வந்தோம், ஒன்றும் இல்லாதவர்களாக வந்தோம் அவ்வாறே ஒன்றும் இல்லாத வர்களாகவே கடந்து செல் வோம். சுருக்கமாக கூறினால்; நாங்கள் பிறக்கும் போது எங்களைப் பெற்ற தாயை அறியாதவர்களாய் பிறந்தோம். எங்களுக்கு அறிவு வந்த போது நாங்கள் யார் மடியில் இருந் தோமோ, யாரைக் காட்டி இவர் தான் தாய் என்று சொன்னார் களோ அவர் தான் தாய். நாங் கள் பிறந்தவுடன் யாரோடு எங்களைக் கொண்டு சென்று விடுகின்றார்களோ அவர் தான் எங்களுக்குத் தாய். எங்கே? என்ன குலம்? கோத்திரத்தில் பிறந்தோம்? என்ன நடைபெறப் போகிறது? என்று தெரியாமல் வெறும்கையாய் வந்தோம்: ஆனால் இவ் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் அநேக காரி யங்களுக்காக உரிமை பாராட்டு கின்றோம். ஆனால் நாங்கள் மரித்த பிற்பாடு என் ஆத்து மாவைக் குறித்து கர்த்தர் பெருமை பாராட்டக் கூடிய தாக எமது வாழ்வு இருக்க வேண்டும்.

இதனைத் தடைபண்ணு வது தான் பொருளாசை. ஓர்

குளக்கரையில் இருந்து ஒருவன் தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் அவ்வாறு மீன் பிடித்தபிற்பாடு பிடிக்கப்பட்ட மீன் இன்றைக்கு போதுமானது என்று யோசித்தான். எனவே அந்த மீனை தனது பறியில் போட்டுவிட்டு அருகிலிருந்த மரத்தடியில் நித்திரை செய்ய ஆரம்பித்தான். அப்போது அந்த வழியாய் காரில் பிஸ்னஸ் மனிதன் ஒருவர் வந்தார். அவர் மரத்திற்கு கீழே இந்த மனிதன் நித்திரை செய்வதைப் பார்த்து தனது காரை நிறுத்தி அவனுக்கு அருகே வந்து பார்த்த போது, அவனுக்கு அருகில் அவனது மீன்களை வைக்கும் பறி, தூண்டில், மீன் பிடிப்பதற்கான புழுக்கள் இருந்தது. ஆனால் அந்த பறிக்குள் பார்த்தால் ஒரு மீன் மட்டும் தான் இருந்தது. எனவே காரில் வந்த அந்த மனிதன் இவனைத் தட்டி எழுப்பி சோம்பேறியே ஏன் நித்திரை செய்கிறாய்? என்று கேட்டார். அதற்கு அவன் இன்றைக்கு தேவையான மீனைப் பிடித்து விட்டேன் அதனால் நித்திரை செய்கிறேன் என்றான். அப்பொழுது காரில் வந்த வசதி படைத்த மனிதன், உன்னைப் போன்று முட்டாள் கிடையாது. இன்னும் நீ தூண்டில் போட்டு அதிக மீன்களைப் பிடித்திருக்கலாம் என்றார். அதற்கு இவன், ஐயா நான் அதிக மீன்களைப் பிடித்து என்ன செய்வது என்று கேட்டான். அதற்கு அவர், அவைகளை விற்று வள்ளம் ஒன்றை வாங்கலாமே என்றார். அதற்கும் அவன்: நான் வள்ளம் வாங்கி என்ன செய்வது? என்றான். காரில் வந்த மனிதன் சொன்னார்: நீ வள்ளத்தில் சென்று மீன்பிடித்தால் அதை விற்று பெரிய படகு வாங்கி அதில் அனேக தொழிலாளிகளை வைத்து தொழில் செய்து நீ பெரிய சம்மாட்டி ஆகலாம் என்றார். அதற்கும் அவன்: ஐயா, நீங்கள் கோபிக்காமல் சொல்லுங்கள், நான் சம்மாட்டியாய் இருந்து என்ன செய்யலாம் என்று. அதற்கு காரில் வந்தவர் சொன்னார்: நீ உன் வீட்டில் இருந்து உன் காலுக்கு மேல் காலைப் போட்டு நித்திரை செய்யலாம் என்றார். அதற்கு மரத்தடியில் படுத்திருந்தவன்: இவைகள் ஒன்றையும் செய்யாமல் அதைத் தான் நான் இப்போதும் செய்து கொண்டிருக்கிறேன் என்றான்.

ஆண்டவர் தன்னுடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்க போதுமானவராய் இருக்கிறார். **மேலதிகமான ஆசைகள் - விருப்பங்கள் - தேவைகள் எமக்கு இருக்கக் கூடாது.** முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்

படும். நாம் ஒவ்வொரு நாளும் ஆண்டவருக்கு முன்பதாக முழந்தாள் படியிடும் போது அதற்குரிய பலனை ஆண்டவர் இந்த உலகத்தில் நிச்சயம் தருவார் என்று விசுவாசிக்க வேண்டும். இந்த பொருளாசை எப்படி வெளிப் படும் என்று ஆண்டவருடைய பாதத்தில் இருந்து நான் பெற்றுக் கொண்ட ஒரு சில காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கின் றேன்.

## 01. ஒரு மனிதனுக்குள் பொருளாசை இருக்கு மென்றால் தனக்குரிய பங்கை கேட்பவனாக இருப்பான்.

**லூக்கா 12:13 அப்பொழுது ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஆஸ்தியைப் பாகம் பிரித்து என் வீதத்தை எனக்குத் தரும்படி என் சகோதரனுக்குக் கட்டளையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.** ஒரு மனுஷன் கேள்வி கேட்ட போது தான் ஆண்டவர் பொருளா சையைக் குறித்து பேசுகின்றார். **லூக்கா 12:11-12 (11.) அன்றியும், ஜெப ஆலயத்தலைவர்களுக்கும் துரைத்தனத் தார்களுக்கும் அதிகாரமுள்ளவர்களுக் கும் முன்பாக உங்களைக் கொண்டு போய் விடும்போது: எப்படி, என்னத்தை மாறுத்தரமாகச் சொல்லுவோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைப்படா திருங்கள். 12. நீங்கள் பேசவேண்டிய வைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந் நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார் என்றார்.** ஆவியானவரின் வல்ல மையையும் - வழி நடத்து தலையும் குறித்து இயேசு பேசிக்கொண்டிருந்த போது அந்த இடத்தில் இருந்த மனுஷன் தனக்குரிய பங்கை தன் சகோதரனி டம் இருந்து பிரித்து தரும்படி கேட்பதை இங்கு காண்கின் றோம்.

**உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்** என்று சங்கீதக் காரனாகிய தாவீது சொல்கிறார். **சவுல் ராஜ்யத்தைப் பார்த்தான் - ஆனால் தாவீது பரிசுத்த ஆவியான வரின் வழி நடத்துதலைப் பார்த்தான்.** என் சொத்தை – என் சீதனத்தை கேட்க முடியாதா என்று சிந்திக்கின்றீர்களா? அந்த மனிதன் தன் சகோதரனுடைய பங்கை அல்ல தனக்குரிய பங்கைத் தான் கேட்டான். ஆனால் அதற்கு பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு சொன்னார். **என்னு டைய உரிமை - எங்களுக்கு கிடைக்க வேண்டியது - இது என் அப்பாவின், அம்மா வின் சொத்து என்று அதில் முத்தி ரையிடுகின்றீர்களா? எச்சரிக் கையாய் இருங்கள்!**

ஆண்டவர் பரிசுத்த ஆவி யானவரின் வழிநடத்துதலைக் குறித்து பேசுகிற போது அந்த மனிதன் ஆண்டவருடைய பிரசங்

கத்தை திசை திருப்புகிறான். நீங்கள் கர்த்தரை நேசிக்கின்றீர்களா? தேவனுடைய சமூகத்தை நேசிக்கின்றீர்களா? தொழிலைத் தேடுகின்றீர்களா? எனக்குத் தெரிந்த ஒரு தம்பி இருந்தார். அவர் சொன்னார் எனக்கு ஒரு மோட்டார் சைக்கிள் கிடைத்தால் நான் ஆலயத்திற்கு வருவேன் என்று: அவருக்காய் ஜெபித்த போது அவ்வாறே அவருக்கு ஒரு மோட்டார் சைக்கிள் கிடைத்தது. ஆனால் அவர் ஆலயத்திற்கு வரவில்லை. ஆகவே ஏன் ஆலயத்திற்கு வரவில்லை என்று கேட்ட போது அவர் சொன்னார்: நான் உயர்தரம் படித்துக் கொண்டிருக்கிறேன், அதனை முழுவதுமாக முடித்த பின்னர் ஆலயத்திற்கு வருகிறேன் என்றார். நாம் எதை நேசிக்கிறோம்? எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்? எங்களுடைய முடிவு – மறுமையைக் குறித்து சிந்திக்கிறோமா? நான் இந்த உலகத்திலே முன்னேற வேண்டும், தொழில் செய்ய வேண்டும் என்று இருக்கிறோம். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை இன்றோ – நாளையோ என்று இருக்கிறது. தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் விழுந்து கொண்டிருக்கிற காலத்தில் நாம் எதை நேசித்துக் கொண்டிருக்கிறோம்?

**பூமியிலே உங்களுக்குப் பொக்கி ஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்: இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்: இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்: அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை: அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.** என்று ஆண்டவர் சொல்கின்றார். கர்த்தர் தருபவைகளை பயன்படுத்துங்கள், சந்தோஷமாக அனுபவியுங்கள் ஆனால் அவைகளையே பற்றிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டாம். ஏனென்றால் ஒரு நாள் அவைகள் எங்களை விட்டு போய்விடும்.

## 02. ஒரு மனிதனுக்குள் பொருளாசை இருக்குமென்றால் அவன் இச்சையோடு கூட செயற்படுகின்றவனாக இருப்பான்.

**யோசுவா 7:20-21 (20.) அப்பொழுது ஆகான் யோசுவாவுக்குப் பிரதியுத்தரமாக: மெய்யாகவே நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்தேன்: இன்னின்ன பிரகாரமாகச் செய்தேன். 21. கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இரு நூறு வெள்ளிச் சேக்கைலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன் பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன்: இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்**

குள் புதைத்திருக்கிறது. வெள்ளி அதின் அடியிலிருக்கிறது என்றான். இஸ்ரவேல் ஜனங்கள் துதியினால் எரிகோ பட்டணத்தை விழுத்தினார்கள். ஜெபத்தை சார்ந்தே வெற்றி பெற்றார்கள். அந்த பட்டணம் ஆண்டவருக்கு பிரியமில்லாத விக்கிரகங்கள் நிறைந்த இடமாக இருந்திருக்க வேண்டும். தேவன் வித்தியாசமான முறையில் தேவ பிள்ளைகளுக்கு வெற்றியைக் கொடுத்தார். ஆனால் அதில் இருக்கின்ற ஒரு பொருளையும் எடுக்கக்கூடாது என்றும் சொன்னார். ஏனென்றால் விக்கிரகத்தோடு சம்பந்தப்பட்ட எந்தப் பொருளும் தேவ பிள்ளைகளின் வீட்டில் இருக்கக் கூடாது என்பதில் தேவன் கவனமாக இருக்கிறார்.

வெற்றி பெற்ற பின்பு ஆகான் அங்கே பார்த்து இச்சித்து சில பொருட்களைக் கொண்டு வந்தான். இச்சை என்பதை இலகுவாக சொல்வதானால்: கட்டுப்படுத்தமுடியாத ஆசை. ஆசை என்பது பிரச்சினை இல்லை ஆனால் அதை எப்போது கட்டுப்படுத்த முடியாமல் போகின்றோமோ அப்பொழுது அது இச்சையாக மாறுகின்றது. அந்த இச்சை பொருளாசை என்கிற பாவத்திற்குள் கொண்டு செல்கிறது. அருமையான தேவ பிள்ளைகளே, நீங்கள் வங்கியில் வைப்பு செய்கின்ற பணம், உங்கள் வீட்டில் இருக்கிற ஒவ்வொரு பொருட்களுக்கும் ஆண்டவருக்கு கணக்கு கொடுக்க வேண்டும். அரசியல்வாதிகள் கணக்கில் காட்டாது களவாக வங்கியில் வைப்பிலிட்ட பணத்தை இப்போது வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் எங்களுடைய காரியங்கள் எல்லாம் கடைசியில்தான் வெளிப்படும். தூசியும் சாட்சியிடும் என்று ஆண்டவர் சொல்கிறார்.

அனைத்தையும் வாங்குங்கள் ஆனால் எந்த வழியில் - விசுவாசத்தில் எடுக்கின்றீர்கள்? எந்த மனநிலையில் வாங்குகின்றீர்கள்?. தேவன் ஒவ்வொன்றையும் கவனித்துப் பார்க்கிறார். சிலர் கர்த்தருக்கு பிரியமற்ற தொழில்களைச் செய்கிறார்கள்: ஞாயிற்றுக்கிழமைகளில் திருவிருந்தும் எடுக்கிறார்கள். விக்கிரகங்களை வணங்கமாட்டோம் ஆனால் அது சம்பந்தமான காரியங்களைச் செய்வோம். நீங்கள் சொல்லலாம் அது என்னுடைய தொழில் என்று. பிரியமானவர்களே ஆண்டவருக்காக அந்த தொழில் ஆசீர்வாதத்தை நீங்கள் இழந்தால் அதை விட பத்து மடங்கு ஆசீர்வாதத்தை தர என் தேவன் போதுமானவராய் இருக்கிறார். இந்த உலகத்தில் ஒரு மரத்திற்கு கீழே தான் இருந்தாலும் பரவாயில்லை ஆனால் மற்றவனைப் போன்று வாழ வேண்டும் என்று நீங்கள் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடிகளையும் குறித்து மிக கவனமாய் இருங்கள்.

பத்திரிகை ஒன்றில் ஒரு சம்பவத்தை வாசித்தேன்: சீனா தேசத்தில் நடைபெற்ற உண்மைச் சம்பவம். ஒரு காதலனும் - காதலியும் பொருட்களை வாங்குவதற்காக கடை ஒன்றிற்கு சென்றார்கள். என்னிடம் இவ்வளவு தான் பணம் இருக்கிறது, எனவே இந்தப் பணத்திற்கு ஏற்றவாறு பொருட்களை வாங்கும்படி காதலன் கூறினான். இவர்கள் உள்ளே சென்று மூன்றாம் மாடிக்கு சென்ற போது அங்கே காலணிகள் இருந்தது. எனவே ஒவ்வொரு நிறங்களிலும் காலணிகளை எடுப்பதற்கு காதலி ஆரம்பித்தாள். அந்த வாலிபன் கணக்கைப் பார்த்து சொன்னான், இதற்கு மேல் காலணிகளை வாங்க வேண்டாம், பணம் இல்லை என்று சொல்லியும் அந்தப் பெண் மேலும் காலணிகளை எடுத்துக் கொண்டிருந்தாள். எனவே கீழே சென்று பணத்தைக் கட்டமுடியாது அவமானப்பட வேண்டும் என்று நினைத்து அந்த வாலிபன் மூன்றாம் மாடியில் இருந்த கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு கீழே குதித்து மரித்துப் போனான். ஒரு பொருளாசைக் காரியத்தால் வாழ வேண்டிய ஒரு வாலிபன் மரித்துப் போனான். இன்றைக்கும் உங்களுடைய வீட்டில் இருக்கிற கடன், மேலதிக செலவுகளுக்கு காரணம் என்ன? நாங்கள் அனேக நன்மைகள், ஆசீர்வாதங்களை அனுபவிக்கின்றோம். ஆனால் உங்களை விட ஒரு வேளை உணவிற்கு கூட கஷ்டப்படுகின்ற எத்தனையோ குடும்பங்கள் இருக்கிறார்கள். ஒரு நாள் மாலை வேளை ஒரு விதவை தாய் எங்கள் வீட்டிற்கு வந்து என்னோடு கதைத்து, ஜெபித்துவிட்டு சென்ற போது எனது மனைவி அவரை வழியனுப்பி வைக்க சென்ற போது தான் தெரிந்தது அவர் அந்த நாள் முழுவதும் ஒன்றுமே சமைக்கவில்லை, என்னோடு பேசிய போது கூட அவர் அதை எனக்குச் சொல்லவில்லை. எத்தனை பேர் எத்தனையோ கஷ்டங்களோடு இருக்கிறார்கள்.

**யாத்திராகமம் 20:17 பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக: பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்.**

என்னுடைய உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை எப்படி சென்று கொண்டிருக்கிறது? 60 வயதை உடைய ஒரு நபருக்கு பிள்ளைகள் - பேரப்பிள்ளைகள் எல்லாம் இருக்கிறார்கள். அவர் தன்னுடைய மனைவிக்குச் சொன்னார்: நான் இன்னொரு திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று. அதற்கு அவருடைய மனைவி சரி,

விரும்பினால் திருமணம் செய்து கொள் என்று சொன்ன போது அந்த மனிதன் மனைவியிடம் சொன்னாராம்: நீ இந்த வீட்டை விட்டு வெளியேறு என்று. இந்த கதை வருவதற்கு காரணம்: அடிப் படையில் ஏதோ ஒரு பாவத் திற்குள் அந்த மனிதன் விழுந்திருப் பதை அது காண்பிக்கிறது. இன் றைக்கு அனேகர் கூறுவார்கள்: உன்னை திருமணம் செய்த வேளை என்னுடைய மச்சானை திருமணம் செய்திருக்கலாம் என்று.. பல கோணங் களில் கூறுவார்கள். ஏன் இப்போது அப்படிப்பட்ட எண்ணங்கள் எழுகின்றது?

அருமையானவர்களே, உங்களுடைய வீட்டில் உலா விக் கொண்டிருக்கிற கர்த்தரை மறந்து, நீங்களும் நானும் கதைக் கின்ற கதைகள் ஒவ்வொன்றை யும் ஆண்டவர் கவனிக்கிறார் என்பதை மறந்து போகின்றோம். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் இருந்த போது ஆண்டவர் சொன்னார்: நீங்கள் மலம் கழிக்கச் செல்லும் போது தடியை கொண்டு சென்று அதனை மண்ணில் புதைக்க வேண்டும். ஏனென்றால் உனக்கு வெற்றி கொடுக்கும்படி பாளயம் எங்கும் உலவிக் கொண்டிருப் பேன். அப்பொழுது உன்னுடைய அசுத்தத்தைக் கண்டு நான் திரும்பி சென்றுவிடுவேன். எங்களுடைய ஜெப அறையில் மாத்திரம் அல்ல, எங்கள் வீடு – காணி முழுவதிலும் ஆண்டவர் உலாவிக் கொண்டிருக் கிறார் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

## 03. ஒரு மனிதனுக்குள் பொருளாசை இருக்குமென்றால் துரோகம் வெளிப்படும்.

**மத்தேயு 26:14 அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் காரியோத்து என்பவன் பிரதான ஆசாரி யரிடத்திற்குப் போய்:** மூன்றரை வருடங் களாக யூதாசைப் போஷித்து இயேசு வளர்த்தெடுத்தார். அவனுக்கு எல்லா வற்றுக்கும் மேலாக இருந்து அவனுடைய எல்லா நன்மை களுக்காகவும் செயற்பட்டுக் கொண்டிருந்தார். மூன்றரை வருட முடிவிலே 30 வெள்ளிக் காசிற்காக அவரைக் காட்டிக் கொடுத்தான். இதற்கு அடிப்ப டைக் காரணம்: 30 வெள்ளிக் காசின் மேல் இருந்த பொரு ளாசை. **துரோகம் பண்ணி பெற்றுக் கொள்ளும் உழைப்புக்கள், வருமானங் களை நீங்கள் ஒரு போதும் அனுபவிக்க மாட்டீர்கள். அருமையானவர்களே உங்களை நம்பி ஒருவர் கடன் தந்தால் அதை திரும்ப செலுத்த வேண்டும். நம்பி தந்த கடனிற்கு துரோகம் - அடாத்து பண்ணி னால் யூதாசின் வேலையை செய் கின்றீர்கள்.** அவ்வாறிருந் தால் ஆண்டவர் ஒரு போதும் உங்களை ஆசீர்வதிக்கமாட்டார்.

எத்தனை பேர் பெற்றுக் கொண்ட கடன்களை இன்னமும் திரும்ப செலுத்தாமல் இருக்கிறீர்கள்? சிலர் எல்லோரிடமும் கடன்களை பெற்று இறுதியில் எதனையும் திரும்ப செலுத்தாமல் தொடர்பும் இல்லாமல் போய்விடுகிறார்கள். **நீதிமொழிகள் 22:7b கடன்வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை.** வசனம் இவ்வாறு சொல்கிறது; ஆனால் இப்போது நிலமை தலைகீழாக இருக்கிறது. கடன் கொடுத்தவர் கடன் பெற்றவரிடம் சென்று திரும்ப கேட்டால்: தருவேன் தானே, பொலீசுக்கு அறிவிக்கப்போகின்றீரா? போதகருக்கு சொல்லப் போகின்றீர்களா? சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். ஒருவன் கடன் வாங்க போகும் போது தன்னுடைய நண்பனையும் அழைத்துக் கொண்டு சென்றான். அங்கே கடன் கொடுக்கிற முதலாளி வந்த போது ஐயா! எனக்கு இவ்வளவு பணம் வேண்டும், நான் திரும்ப இந்த நாளில் தந்துவிடுவேன் தருவீர்களா? என்று கேட்டான். அப்பொழுது அந்த முதலாளி உனக்கு கடன் தருவது எனக்கு பிரச்சினை இல்லை, நீ திரும்ப அந்த கடனைத் தந்துவிடுவாய், ஆனால் கடன் வேண்டும் என்றால் என் காலில் விழுந்து கும்பிட வேண்டும் என்றார். அதற்கு அவன் ஐயா, இவ்வளவு தானா என்று சொல்லி, தன்னுடன் வந்த நண்பனை சற்று தள்ளி நிற்கச் சொல்லிவிட்டு கடன் கொடுக்கப் போகிறவரின் காலில் விழுந்து வணங்கி பணத்தைப் பெற்றுக் கொண்டு செல்கிற போது, அவனுடைய நண்பன் அவனைப் பார்த்து, இப்படி காலில் விழுந்து கும்பிடுகிறாயே, உன்னை எனது நண்பன் என்று சொல்லவே வெட்கமாக இருக்கிறது என்றான். அப்பொழுது அவன் சொன்னான், இந்த கடனை வாங்குவதற்கு அவரின் காலில் நான் ஒரு தடவை தான் விழுந்தேன் ஆனால் அவர் திரும்ப இந்த கடனை என்னிடம் இருந்து வாங்குவதற்கு என்னுடைய காலில் எத்தனை தடவை விழுகிறார் என்று பார் என்றான்.

இப்படிப்பட்ட விசுவாசிகளும் எம்மிடம் இருக்கிறார்கள். **சங்கீதம் 37:21 துன்மார்க்கன் கடன் வாங்கிச் செலுத்தாமற்போகிறான்: நீதிமானோ இரங்கிக்கொடுக்கிறான்.** கடன் வாங்கிக் கொடுக்காதவன் துன்மார்க்கன், அவனுக்கு யூதாசின் முடிவு தான் ஏற்படும். ஆகவே அருமையானவர்களே, **உங்களுடைய வீட்டில் இருக்கிற கடனை தீர்ப்பது தான் உங்களுடைய முதலாவது வேலையாக இருக்க வேண்டும். அந்தக் கடனை திரும்ப கொடுக்கும் வரை புதிதான பொருட்களோ — புதிதான ஆசீர்வாதங்களோ உங்களுக்கு வேண்டாம்.** துரோகம் பண்ணுகிற போது எச்சரிக்கையாய் இருங்கள் என்று ஆண்டவர் சொல்கிறார். ஆண்டவர் உங்களை நம்பி எத்தனையோ நன்மைகளைக் கொடுத்திருக்கிறார்: எனவே நீங்கள் அவைகள்

எல்லாவற்றிக்கும் உண்மையுள்ள வர்களாய் இருக்க வேண்டும்.

## 04. ஒரு மனிதனுக்குள் பொருளாசை இருக்குமென் றால் அவன் பொய் சொல்வான்.

அப்போஸ்தலர் 5:3-4 (3.) **பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ் சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருத யத்தை நிரப்பினதென்ன? 4. அதை விற்குமுன்னே அது உன்னுடையதா யிருக்கவில்லையோ? அதை விற்ற பின்பும் அதின் கிரயம் உன் வசத்திலி ருக்கவில்லையோ? நீ உன் இருதயத் திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்ட தென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனி டத்தில் பொய்சொன்னாய் என்றான்.** ஆதித்திருச்சபையிலே இருந்த அனனியா – சப்பீராள் தங்கள் சொத்துக்களை விற்று ஒரு பங்கை வைத்துவிட்டு இன்னொரு பங்கை கொண்டு வந்து ஆண்டவருடைய மனுஷனிடத்தில் கொடுத்தார்கள். இவ்வளவுக்குத் தான் விற்றீர்களா என்று கேட்ட போது, நாங்கள் அதிக விலைக்கு விற்பனை செய் தோம், எங்களுடைய அவிசுவா சத்தினால் ஒரு பங்கை வைத்து விட்டு இன்னொரு பங்கை ஆண்டவ ருக்கு கொடுக்க வந்திருக்கிறோம் என்று கூறியிருந்தால் பிரச்சினை முடிந்திருக்கும்.

ஆனால் கணவனும் - மனைவியும் இணைந்து இவ்வள வுக்குத் தான் விற்பனை செய் தோம் என்று ஒரு பொய்யை அரங்கேற்றினார்கள், இதனால் முடிவிலே என்ன நடைபெற்றது என்பதும் உங்களுக்குத் தெரியும். அருமையானவர்களே, பொய் சொல்கிறவர்களின் வாய் அடைக் கப்படும். பொய் பேசுகிறவர் களின் வாயை நீர் சங்கரிப்பீர் என்று வேதாகமத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அது தான் அனனியா – சப்பீராளுக்கு நடந் தது. அவர்கள் நல்ல காரியத்தை தான் செய்தார்கள், ஆனால் அதை பொய்யோடு சேர்த்து செய்தார் கள். நாங்கள் இடுகின்ற ஒவ் வொரு கையொப்பங்களுக்கும் ஆண்டவர் கணக்கு கேட்பார். காணி உறுதிகளை களவாக மாற்றி எழுதுவதையெல்லாம் ஆண்டவர் கணக்கு கேட்பார். 12மணிக்கு வேலைக்கு சென்று விட்டு 8மேணி என்று கையொப்பம் இடுகின் றோம், முகாமையாளர் என்னுடைய கைக்குள் தான் இருக்கிறார் என்று சொல்கின்றோம். இப்படிச் செய்தால் நாம் தான் சாத்தானின் கைக்குள் இருக்கிறோம். கதை களைப் புரட்டுவது, உண்மையான கதைகளை பொய்யாக கூறுவது, நடந்ததை நடக்கவில்லை என்றும்: நடக்காததை நடந்தது என்றும் சொல்வதையெல்லாம் கர்த்தர் கவனிக்கிறார்.

ஆண்டவர் நியாயம் தீர்க்கிற நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நியாயத்தீர்ப்பு எங்கள் வாசலண்டை வந்துகொண்டிருக்கிறது. ஆகவே தேவபிள்ளைகளே பொய் பேசாதிருங்கள். நான் ஆவியில் உணருகிற காரியம் ஆராதனைக்குள்ளும் ஜனங்கள் பொய் பேசுகிறார்கள். மாதத்தில் ஒரு தடவை திருவிருந்திற்காக ஒரு இடத்திற்கு செல்வேன். அங்கே இருக்கின்ற ஊழியர் வழிநடத்தும் போது பாவ அறிக்கையின் வேளையில் வைத்து பாவ அறிக்கை செய்வார்கள். அதற்கு பிற்பாடு திருவிருந்து ஆராதனை நடைபெறுகின்ற போது நானும் பாவ அறிக்கை வேளையை வைத்து பாவ அறிக்கை செய்தேன். பிற்பாடு பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும், ஆண்டவர் கிருபையாய் இருக்க வேண்டும் என்று ஒருவரை ஜெபிக்கச் சொன்னேன். அவர் ஜெபித்த போது ஆண்டவரே நான் பாவி பாவி என்று அடிக்கடி சொல்லாமல் நாங்கள் பரிசுத்தவான்கள் என்று விசுவாசிக்க எங்களுக்கு உதவி செய்யும் என்று ஜெபித்தார். இது எதனைக் காண்பிக்கிறது என்றால் பாவ அறிக்கை செய்யச் சொல்லிய எனக்கு முதலாவது அடி அடுத்து பாவங்களை அறிக்கையிட மனதில்லை என்பதை காண்பிக்கிறது.

இன்றைக்கு உபதேசம் எப்படி வருகிறது என்றெல்லாம் தெரியாமல் இருக்கிறது. ஆனால் பரிசுத்தமாய் இருக்கிறவர்கள் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்று வேதம் சொல்கிறது. பாவ அறிக்கை இல்லாத தனிப்பட்ட ஜெபம் - ஆராதனைகள் வேண்டாம். **பாவ அறிக்கை செய்தால் நான் பாவி அல்ல மாறாக நான் இன்னும் பரிசுத்தமாகின்றேன்.** தேவாலயத்திற்கு இருவர் செல்கிறார்கள். ஒருவன், தான் உபவாசிக்கிறேன், காணிக்கை கொடுக்கிறேன், அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று ஜெபித்தான். ஆனால் மற்றவன் ஆலயத்திற்குள் கூட செல்லத் துணியாமல் பாவியான என்மேல் இரக்கமாயிரும் என்று ஜெபித்தான். இவன் தான் நீதிமானாக்கப்பட்டவனாய், ஆண்டவருடைய மகிமையோடு கூட சென்றான். நாங்கள் தேவாலயம் வரும் போதும் பெருமையோடு வருகிறோம், ஆலயத்தை விட்டுச் செல்லும் போதும் பெருமையோடு கூட கடந்து செல்கிறோம். இதனால் ஒரு பிரயோசனமும் இல்லை.

ஆண்டவர் எங்களுடைய வாழ்க்கைக்கு செய்த அன்புக்கு, சிந்திய இரத்தத்திற்கு ஈடாக எதையும் கொடுக்க முடியாது. **நான் ஆலயம் கட்டுவதற்கு காணி வாங்குதற்காக எனது சங்கிலியை விற்பனை செய்து பணம் கொடுத்தேன்; ஆண்டவர் என்னோடு பேசினார். நான் பாவ அறிக்கை செய்யத்தேவையில்லை என்று சொல்கின்றீர்களா?** பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்: அறிக்கை

செய்து விட்டுவிடுகிறவன் இரக்கம் பெறுவான். ஒவ்வொரு நாளும் ஜெபிக்கும் போது என் வாழ்க்கை பரிசுத்தமாகட்டும் என்று ஜெபியுங்கள். ஆராதனைக்காக ஆண்டவர் ஆசரிப்பு கூடாரத்தை நியமித்தார், அந்த ஆசரிப்பு கூடாரத்திற்குள் ஆசாரியன் செல்லும் போது கை—கால்கள் கழுவ வேண்டும். நேற்று கழுவினேன் என்று சொல்லி கழுவாமல் உள்ளே செல்ல முடியாது. ஒவ்வொரு நாளும் கழுவ வேண்டும். ஆகவே ஒவ்வொரு விசுவாசிகளும் ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். தன்னுடைய வாழ்க்கையை ஒப்புக் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். அப்போது பரிசுத்தமுள்ள தேவன் எம்மை ஆசீர்வதிப்பார். அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கிறது! ஆயத்தமாவோம்!! ஆயத்தப்படுத்துவோம்!!!

## சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:

**வினாவிடை – 76**

குகன் குடும்பம்,

கனடா.



**குறுக்கெழுத்துப்போட்டி – 74**

ச.தெறஷியா,

மீசாலை.

# வினா விடை – 77

01. ஏழு வருஷம் தன் புருஷனுடனே வாழ்ந்த ஸ்திரீ யார்?
02. இராமுழுவதும் நடந்த ஒரு பக்தன் யார்?
03. சவுல் ராஜாவின் தலையை வெட்டினவர்கள் யார்?
04. வெட்டாதமைந்த வழி எது? கட்டாதமைந்த சிலை எது?
05. அமளியான கடல் அலைகள் யார்?
06. புருஷனிலிருந்து ஒரு ஸ்திரீ பிறந்தாள்; ஸ்திரீயிலிருந்து ஒரு புருஷன் பிறந்தான் யார்?
07. மிதிபட்டு இறந்து போன ஸ்திரீ யார்?
08. யாருடைய தலை மதிலின் மேலிருந்து போடப்பட்டது?
09. கொந்தளிக்கும் கடல் அலைகள் யார்?
10. மோசேக்கு கர்த்தர் தரிசனமான பர்வதம் எது?

# குறுக்கெழுத்துப் போட்டி - 75

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- நன்றி -

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | ⊕ | | | | 04 |
| ⊕ | | | | ⊕ | | ⊕ | ⊕ | |
| | | | | ⊕ | | 05 | | |
| | | | 06 | | | | | |
| | ⊕ | | ⊕ | | 07 | | | ⊕ |
| | 09 | | ⊕ | | ⊕ | ⊕ | 08 | ⊕ |
| | | ⊕ | | 10 | | | | 11 |
| 13 | | 12 | | | | | ⊕ | ⊕ |
| ⊕ | | | | | | | | 14 |

## இடமிருந்து வலமாக

01. தீமோத்தேயுவின் பாட்டி
12. 24 விரல்களுள்ள நெட்டையான மனுஷனைக் கொன்றவன்

## வலமிருந்து இடமாக

04. இவள் யோராமின் குமாரத்தி, அகசியாவின் சகோதரி
11. அபிமெலேக்கின் அப்பா
14. சவுல், தாவீதை பின் தொடருகிறதை விட்டுத் திரும்பிப்போன இடத்துக்கு இவ்வாறு பெயரிடப்பட்டது.

## மேலிருந்து கீழாக

02. மனுஷனுடைய ............ அவன் கோபத்தை அடக்கும்: குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை
03. தாவீதின் சிங்காசனத்தைப் பார்க்கிலும் இவனுடைய சிங்காசனத்தைக் கர்த்தர் பெரிதாக்குவார் என்று பெனாயா கூறினான்
04. இவனின் சகோதரர் எல்லாரும் ஒரே கல்லின் மேல் கொலை செய்யப்பட்டார்கள்
09. கீலேயாத்தியர், தப்பிப்போகிற எப்பிராயீமரிடம் இந்த வார்த்தையை உச்சரிக்கும்படி கூறினார்கள்

## கீழிருந்து மேலாக

06. இவள் கெங்கிரேயா சபையின் ஊழியக்காரி
07. தானியேல் பார்த்துக் கொண்டிருக்கையில் சிங்கம் போன்ற மிருகத்திடமிருந்து பிடுங்கப்பட்டவை
08. ............ பாதையில் ஜீவன் உண்டு: அந்தப் பாதையில் மரணம் இல்லை
10. ஆசேர் கோத்திரத்திலிருந்து கானானைச் சுற்றிப்பார்க்க அனுப்பப்பட்டவன்
13. அகசியா மரித்த பின் தேசத்தின் மேல் ராஜ்யபாரம் பண்ணியவள்

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் [தபால் செலவு உட்பட]

## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 220.00 |
| இந்தியா (India) | 390.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 840.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 420.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 510.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 720.00 |

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப் பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

### சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................................

முகவரி:........................................................

...................................................................

...................................................................

To:.................................................................

...................................................................

...................................................................

...................................................................

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே 0772002351